# திராவிடநாடு

## எழு! எழு! எழுந்திரு!!

[வாணிதாசன்]

—★—

வாழ்க! வாழ்கவே! வாழ்கவே! தமிழ்
வாழ்க வாழ்கவே! வாழ்கவே!—மக்கள்
உளமும் வாயும் இனிக்கும் தீந்தமிழ்!

சூழ்ந்த மொழியுள் தமிழே தாயாம்! மண்
தோன்றிய நாளே தோன்றியதாம் தமிழ்!

ஆரியச் சித்திய மொழிகளுக் கெல்லாம்
ஆணிவேர் நம்மரும் திராவிடம் கண்டாய்!
பாரில் இதைப்போல் கன்னியாய் என்றும்
பல்லாண்டு வாழ்ந்த மொழியுண்டோ சொல்லாய்!

இந்தா! இதைக்கேள்; என்னருந் தோழா!
இன்தமிழ்ப் பகையெலாம் உன்னுயிர்ப் பகையாம்!
அந்தந்த நாடும் அந்தந்த நாட்டார்
ஆளல் முறையென வாளேந்தி விட்டார்
வந்த பகைகண்டு சொந்தமொழி மறந்து
வாய்பொத்தி இருப்பதோ? வாளேந்திப் புறப்படு!
சொந்தமாம் திராவிடம்! தாயகம்! ஆம்! ஆம்!
சூரப்புலி மகனே! எழு! எழு! எழுந்திரு!!

2 அணா

# கா--கு!!

[கற்பனை உரையாடல்]

## மாளிகை

கு:- பெரியகூட்டம், மிகப் பெரிது. நான், வெளுத்துக்கட்டி விட்டேன்! ஐயாகூடப் பேசினார்.

கா:- கேள்விப்பட்டேன், ஐயா என்ன பேசினார்?

கு:- மலையாளிகளுடைய ஆதிக்கத்தை ஒழித்தாகவேண்டும் என்பதுபற்றிப் பேசினார்...

கா:- அப்படியா...

கு:- மலையாளிகள் கேட்கும் தட்சிணப் பிரதேசத் திட்டத்தை மண்டையில் அடித்தார். மற்றொரு விசேஷம்......தமிழ்நாடு என்றே இனி திட்டம்.

கா:- அது நல்லதுதான்! தமிழ்நாடு என்பது தனக்குத்தான் காப்பிரைட் என்று கூறிக்கொள்கிறாரே ம. பொ. சி. அவருக்குச் சரியான சூடுதான்...

கு:- அதுதான் சூக்ஷமம்...

கா:- அவர்கள், திராவிடநாடுதான் பேசுகிறார்கள் போலிருக்கிறதே...

கு:- பேசட்டும், பேசட்டும்... அதுகள் மீது தாக்குதல் நடத்த, அதுவும் ஒரு சான்சு...

கா:- சரி... வரட்டுமா?...

கு:- நான் சொன்ன விஷயம்...

கா:- அவசரப்படேல்... ஆகட்டும்...

*

## வேறு மாளிகை

வ:- இது புதிய தொல்லையாகி விடுமே...

கா:- எது? தி. கழகம் மலையாளிகளை எதிர்க்கும் விஷயத்தைத் தானே சொல்கிறீர்கள்...

வ:- ஆமாம்... நீங்களும் அதை ஆதரிப்பது போல ஜாடை காட்டுகிறீர்...

கா:- காட்டினால் என்ன...

வ:- உங்களுக்குத் திருப்தி தருவது என்று எண்ணிக்கொண்டு அவர்கள் முழு மூச்சாக மலையாளி ஒழிக என்று ஆரம்பித்துவிடுவார்களே...புதிய தொல்லை...

கா:- புதுதொல்லை ஒன்றும் செய்துவிடாது......இவர்கள் மலையாளிகள் மீது பார்வையைச் செலுத்துவதாலே, இரண்டு பழைய தொல்லை ஒழிகிறது தெரியுமோ...

வ:- அதென்ன...?

கா:- இனி திராவிடநாடு பேசமாட்டார்கள் — ஆரிய—திராவிட பேதம் பற்றிய பேச்சு ஒழியும்...

வ:- ஆமாம்....தமிழர், தமிழ்நாடு, இப்படித்தான் பேசுவார்கள்...

கா:-மற்றோர் விஷயம், மலையாளி ஆதிக்கம் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது நல்லது...ஏனெனில், பார்ப்பனரை ஓட்டுவது, அக்ரகாரத்தைக் கொளுத்துவது, என்ற பேச்செல்லாம் கிளம்பாது...

வ:- ஆமாம்......அதற்கு நேரம், நினைப்புக் கிடையாது...

கா:- இனி, மலையாளிகள் எந்தெந்த இலாகாவில் இருக்கிறார்கள் — எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்கள்—அவர்கள் பழக்க வழக்கம், நடைநொடி பாவனை, பூஜை, முறை இவை பற்றி ஆராய்ச்சி—புள்ளி விவரம்—முழக்கம்—போர்—கிளர்ச்சி— இப்படித் திரும்பிவிடும்—பார்ப்பனர் பற்றிய எதிர்ப்புக்கு ஓய்வுதான்!

வ:- பலே! பலே! நல்ல நல்ல சான்சு அடிக்குதய்யா உமக்கு யோக ஜாதகம்!

கா:- டில்லியிலிருந்து அடிக்கடி தபால் வருகிறது, பார்ப்பன எதிர்ப்புப் பிரசாரம்பற்றி... இனி அந்தத் தொல்லை விட்டது...

வ:- நீங்களும் ஒரு காரியம் செய்தால், நல்ல பலன் இருக்கும்... அவர்களுக்கும் உற்சாகம் இருக்கும்.

கா:- என்ன காரியம்?

வ:- சட்டசபைத் தலைவருக்கு ஒரு தமிழரைப் போட்டுவிடுவது தான்...!

கா:- பழைய காலத்துமுறை உம்முடையது... பிறகு பார்க்கிறேன்...

*

## வீடு

தி. மு. க:- என்ன, குகு! புதிய போர்முரசு?

கு:- புதுசு, பழசு, அதுவா முக்கியம்! போர்முரசு சதாகேட்கும், தெரிகிறதா! உங்களைப்போலவா; உதவாக்கரைகள், உதவாக்கரைகள்! க.து.—தூ! தூ!

தி.மு.க:- மலையாளி ஆதிக்கத்தை ஒழிக்க, தமிழர் தலைவர் காமராஜர் கூட ஒத்துழைப்பார், அல்லவா?

கு:- சந்தேகமென்ன...ஐயா ஒரு மணி நேரம் அதுபற்றிப்பேசினார்... நான் கூட எழுதிவிட்டேன், சட்டசபைத்தலைவர் பதவிக்குத் தமிழர் தான் வரவேண்டும். ஜாக்ரதை! மலையாளிக்கு இடம் கொடுத்து விடாதே என்று எழுதிவிட்டேன்.

தி.மு.க:- பலே! பலே! எழுதியாகி விட்டதா! இனியென்ன? தமிழனுக்குத்தான், சான்சு! மேலும் ஒரு தமிழன் இருந்த இடம்தானே அது..... தமிழருக்குத்தான்.

கு:- இனி ஒவ்வொரு பதவிவரும் போதும், இதேதான்....மலையாளியைப் போடாதே...தமிழனுக்கே தரவேண்டும்...

தி.மு.க:- தமிழன் என்றால், தமிழ் நாட்டுப் பார்ப்பனன்....போடலாமோ!

கு:- கூடாது...கூடவே கூடாது தான்...ஆனால், மலையாளியைப் போடுவதைவிட தமிழ்நாட்டுப் பார்ப்பானைப் போட்டாலும் பரவாயில்லை......

தி.மு.க:- அப்படியா...என்னமோ டெலிபோன்...கேளுங்கள்...

கு:- ஒப்...தான்....இரு....உம்... உம்ம், என்ன, என்ன...ஐய்யயே... அடடா...செச்சே...ஏன்?...

தி.மு.க:- என்ன, முகமெல்லாம் ஒருமாதிரி...யார் டெலிபோனில்...

(11-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

காஞ்சி] 2—10—55 [ஞாயிறு

# பிடி சாம்பல்!

—

பிடி சாம்பல்! முடிவிலோர் பிடி சாம்பல்!

உரிமைக் கிளர்ச்சி எனும் உன்னதமான பணியில் ஈடுபடுகிறோம், உலகெலாம் போற்றிடும் பண்டிதர் நமது பணியினைப் பாராட்டிப் பேசுகிறார்—சுதந்திரம் நம் பிறப்புரிமை என்ற முழக்கத்துடன் செல்கிறோம், நமது உடலில் தூசு விழுந்தாலும் பண்டிதருடைய உள்ளம் பதறும், ஆவி துடிக்கும்; எனவே, நம்மை எந்த எதேச்சாதிகார வெறியனும் ஏதும் செய்யத் துணியமாட்டான் என்று எண்ணிச் சென்றனர்—வீரமிக்க இளைஞர்கள்—பிடி சாம்பல் கிடைத்திருக்கிறது.

பேயாட்சி நடத்திடும் போர்ச்சுகீசிய சர்க்கார், அறப்போர் வீரர்களைச் சுட்டுத் தள்ளினர்.

நாடு கொதித்தது; பண்டிதர் பதறினர்; பாவிகளே! அடுக்குமா இந்த அக்கிரமம் என்று கேட்டார். வீழ்ந்துபட்ட வீரர்கட்கு வீர வணக்கம் செலுத்தினர்—பண்டிதரின் 'கண்டனம்' உலகெங்கும் பரவிற்று — எனினும், இப்போது கிடைத்திருப்பது, பிடிசாம்பல்!

துள்ளும் இளமை துணை நிற்க, தூய கருத்துகள் உடனிருக்க, கோவாவுக்குள் நுழைந்த அறப்போர் வீரர்களை, மிருகங்களை வேட்டையாடுவதுபோலச் சுட்டுத் தள்ளினர்—குருதி கொட்டக் கொட்ட வீரர்கள் கீழே வீழ்ந்தனர், பிணமாயினர்—பிணங்களைத் திருப்பித் தரவும் பேயர் இணங்கவில்லை.

'படை எடுத்து வந்தனர் — தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டோம்" என்று திமிர்வாதம் பேசினர்.

தீரரே! வீரரே! உங்கள் தியாகம் வீண்போகாது; என்று எழுச்சி கொப்பளிக்கப் பேசிய பண்டிதர், என்ன காரணத்தாலோ, கவிழ்ந்து படுத்துக்கொண்டார், கண்களையும் இறுக மூடிக்கொண்டார், இனி சத்யாக்கிரகம் கூடாது — அனுமதிக்கமாட்டேன் — மீறிச் செல்பவர்களைப் போலீஸ் மடக்கும், பிடிக்கும், கொட்டடியில் அடைக்கும் என்று 'சலாசர் பாஷை'யில் பேசலானர். திடுக்கிட்டுப் போயினர், அறப்போர் நடாத்தியோர். பிடிசாம்பல் கிடைத்திருக்கிறது.

உயிரிழக்க அஞ்சாத வீரர்கள் அறப்போரில் ஈடுபட்டுவிட்டனர்—உலகப் புகழ்பெற்ற நேரு பண்டிதர் அவர்களை வாழ்த்தி உற்சாகமளித்துவிட்டார், எனவே இனி அவர்கள் ஆயிரக்கணக்கில் உள்ளே நுழைவர், நாள் தவருமல் சுட்டுத் தள்ளிக்கொண்டே இருக்க முடியுமா? நானிலம் என்ன சொல்லும்? கண்டனம் அலை அலையாகக் கிளம்புமே! என்றெண்ணி போர்ச்சுகீசிய சர்க்கார் கலக்கமடைந்த நேரமாகப் பார்த்து, நேரு பண்டிதர், இனி இந்தியாவிலிருந்து கோவாவுக்குள் நுழைய சத்யாக்கிரகிகளை அனுமதிக்கப் போவதில்லை என்று அறிவித்துவிட்டார். என்ன காரணம்? ஏன் இப்படிக்காட்டிக் கொடுக்கிறார் என்று கண்ணீர் வடிக்கிறார்கள், விடுதலைக் கிளர்ச்சிக்கு தம்மை ஒப்படைத்துவிட்டவர்கள். போர்ச்சுகீசிய சர்க்கார், ஒரு பெருஞ் சிரிப்பொலியுடன், இப்போது, பிடி சாம்பல் அனுப்புகிறது. அனுப்புவது மட்டுமல்ல, பாராட்டுதலை, நன்றியறிவிப்பைக்கூட எதிர் பார்க்கிறது!

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்ற நாளாம் ஆகஸ்ட்டு பதினைந்து ஆரம்பமாகிறது அறப்போர் — வாழ்த்துதலை வழங்கியுள்ளார் பண்டிதர், இனி பத்து நாளோ, ஒரு திங்களோ, கடைசி பரங்கியும் 'பாரத' நாட்டிலிருந்து ஒழிந்துபோவான் என்று பலரும் நம்பினர். எனவேதான், காரிகை கரமிழந்தது, வீரர் உயிர் இழந்தது கேட்டதும் உள்ளத்தில் பெரு நெருப்பு மூண்டதெனினும், கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, வெற்றி நாளை எதிர்பார்த்தவண்ணம் நாடு இருந்தது. இப்போது, யாவும் முடிவிலொரு பிடிசாம்பல் ஆகிவிட்டது.

கோவாவில் போர்ச்சுகீசிய கொடியவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட, அறப்போர் வீரர்களின் 'சடலங்களை'த் தந்துவிடும்படி, 'இந்திய' சர்க்கார் கேட்டது, கோவாவிலிருந்து, 'ரேடியோ' கூறுகிறது சடலங்களை நாங்களே எரித்துவிட்டோம், என்று!

வீணைக் சிரமம் தரக்கூடாது என்று பெரிய மனம் வைத்து இந்தக் காரியத்தைச் செய்திருப்பது போலப் பேசுகிறது போர்ச்சுகீசிய பேயாட்சி.

சடலங்களைக் கொளுத்திவிட்டு, இந்திய கான்சல் ஜெனரலிடம் 'பிடிசாம்பல்' கொடுத்துவிட்டிருக்கிறார்களாம்.

இந்து சம்பிரதாய முறைப்படிதான் 'தகனம்' செய்தோம் என்று வேறு பேசுகிறது, கோவா ரேடியோ!

அதுமட்டுமா! சடலங்களைத் 'தகனம்' செய்தாகவேண்டும் என்று எந்த சர்வதேசச் சட்டமும் வலியுறுத்தாது— எனினும் நாங்கள், இந்து குடும்பத்தாரின் மதஉணர்ச்சிக்கு மதிப்பளிக்கவேண்டும் என்ற நோக்குடன் 'தகன கைங்கரியம்' செய்தோம் என்று கூறுகிறது.

கேட்டது சுதந்திரம், கிடைத்திருப்பது, பிடி சாம்பல்.

சடலங்களை அப்படியே கிடக்க விட்டிருக்கலாம்—காக்கையும் கழுகும் கொத்தும், நரியும் பிறவும் பிய்த்துத் தின்னும், புழுத்துப் போயிருக்கும்—நாங்கள் இந்து முறைப்படி 'தகனம்' நடத்தினோம்—சாம்பலையும்—கான்சல் ஜெனரல் மூலம், குடும்பத்தாருக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். கண்டீரா எமது பெருந்தன்மையை, பெருங் குணத்தை, என்று கேட்பது போலப் பேசுகிறது, கோவா ரேடியோ.

கேட்டது விடுதலை, கிடைத்திருப்பது பிடி சாம்பல்.

★

## முதுகெலும்பு!

கேள்வி:- ஒரு தேசத்தின் முதுகெலும்பு எது?

பதில்:- முதுகெலும்புள்ள தலைவர்கள்!

(ஈழகேசரி)

## மாஸ்கோவில்

# பாஞ்சாலி கோயில்!

அப்துல்காதர், சம்பூர்ண இராமாயணம் பார்க்கிறார், ரசிக்கிறார், மீண்டும் மீண்டும் பார்க்கிறார்!

சைமன், சிறுத்தொண்டர் கதையைச் சினிமாவில் பார்க்கிறார்!

சிவந்தபாதம் பிள்ளை, 'ஏசுவின் கடைசி உபதேசம்' என்ற சினிமா படத்தைக் குடும்பத்தாருடன் சென்று பார்க்கிறார்.

அப்துல்காதர், 'ராமதாசர்' ஆகிவிடமாட்டார்!

சைமன், சைவ மெய்யன்பராகி விடமாட்டார்!

சிவந்தபாதம் பிள்ளை சிலுவை தேடிக்கொள்ளமாட்டார்!

இஸ்லாத்தைத் தமது மார்க்கமாகக் கொண்டுவிட்டவர் இரவிகுலச் சோமன், பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்கான முகூர்த்தம் நெருங்கும் போதே, பட்டாடையைக் களைந்து விட்டு, மர உரி தரித்து, மைதிலியை உடனழைத்துக்கொண்டு, கானகம் போகும் கட்டம், நாடகமேடையில் காட்டும் போது, ராமவேடம் தரித்த நடிகனுடைய நடிப்புத் திறனையோ, மர உரி தரித்த நிலையில் மட்டற்ற அழகுடன் விளங்கும் சீதா வேடமணிந்த செல்வியின் நடிப்பையோ கண்டு ரசித்துக்கொண்டிருப்பாரே தவிர, "ஆஹா, அவதார புருஷன், எவ்வளவு அல்லலுக்கு ஆளானார், அந்தோ, அரிபரந்தாமா, உனக்கு இந்தக் கதிவரலாமா," என்று பக்திரசம் சொட்டச் சொட்ட உருக்கமாகப் பேசமாட்டார். ராமர் வேடத்தில் இராகவாச்சாரியை மீறுவார் கிடையாது. சீதா வேஷத்துக்கென்றே பிறந்தவள், செல்வி, ஒரடியைவிட இந்துஸ்தானி மெட்டு அழகாக அமைந்தது,— என்று இவைபற்றித்தான் பேசுவார். ஏனெனில், அப்துல்காதர், இராமாயணத்தைத் தனக்கு மத ஏடாகக் கொண்டு இந்த நாடகம் காணவில்லை.

அவருக்கு மதம் வேறு—கோட்பாடு வேறு! இங்கு ஒரு கதையைத்தான் நாடகமாகக் காண்கிறார்.

கதை கூட அல்ல அவருக்கு முக்கியமாகக் களிப்பூட்டுவது—ரசமான கட்டங்கள் — சுவையான பாடல்கள்—நேர்த்தியான நடனங்கள்—சிரிப்பூட்டும் சேட்டைகள்—ஆர்ப்பரிப்பு—இவை!

அதே போலத்தான், சிறுத்தொண்டர் சினிமா காட்சி காணும் சைமன், ஏசுவின் கதையைத் திரையில் காணும் சிவந்த பாதம்.

ஏற்கனவே, ஒரு மனப்போக்கு ஏற்பட்டுவிட்ட நிலையில், ஏதேனும் ஓர் கொள்கையில், தத்துவத்தில், ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டுவிட்ட பிறகு வேறு கொள்கைகள், தத்துவங்கள் ஆகியவற்றினைச் சித்தரித்துக் காட்டும் காட்சிகளை—நாடகத்திலாயினும் சினிமாவிலாயினும் காணும்போது, அவை உள்ளத்தைத்தொடுவது இயலாத காரியம்.

இல்லையானால், ஒரு ஆறுமாதம் இராமாயணம் நடத்தி இஸ்லாமியரை இந்துக்களாக்கி விட்டிருக்கலாம்.

அந்த முறையில், இப்போது, சோவியத் நாட்டிலே மத சம்பந்தமான சிலபல நிகழ்ச்சிகள் நிலைமைகள் உள்ளன என்றால், மத சம்பந்தமான கருத்துகளைக் களைந்தெறிந்துவிட்ட ரஷிய மக்கள், மத நிகழ்ச்சிகளைக் காண்பதாலேயே, பக்தர்களாகி விடுவதில்லை — விட முடியாது.

கம்யூனிஸ்டு கட்சி செயலாளராக உள்ள குருஷாவ் இதைத் தெளிவுபடுத்தி, எங்கள் நாடு மதச்சார்பற்ற ஆட்சிமுறை கொண்டது—நாங்கள் நாத்திகர்கள்—சில பல மத நிகழ்ச்சிகள் இங்கு உள்ளன என்றால், அவை எம்மை ஏதும் செய்யமுடியாது, அவைகளுக்கிருந்த வலிவு எங்கள் நாட்டில் போய்விட்டது, எனவே, அவை இருக்க, அனுமதித்து இருக்கிறோம் வேறென்ன, என்று கேட்டுள்ளார்.

அடிக்கடி, ரஷியாவில், பக்தர்கள்—ஆலயம் செல்வோர் நிரம்ப இருக்கிறார்கள் என்று—கூறி இங்குள்ள சிலர் பூரிப்படைகிறார்கள்—அது கேட்டு இங்குள்ள கம்யூனிஸ்டுகள், 'பூஜாரி' வேலையில் இருந்து கொண்டேகூடப் பொதுஉடைமை பரப்பலாம், என்று எண்ணுகிறார்கள்.

மற்ற நாடுகளிலே, மதசம்பந்தமான நிகழ்ச்சிகள், மக்கள்மனதிலே எத்தகைய உருகவைக்கும் நிலையைத் தருமோ, அந்த நிலை ரஷியாவில் மாறிவிட்டது. எனவே தான், அத்தகைய மத நிகழ்ச்சிகள் இருப்பினும், எமது அடிப்படைக்கு ஒரு ஆபத்தும் விளையாது என்கிறார் குருஷாவ்.

இதை அறிந்து கொள்ளாத சிலர், தெரியுமா! தெரியுமா! ரஷியாவில் 'பாரதத்தை' மொழி பெயர்த்திருக்கிறார்கள், என்று பூரிப்புடன் பேசி, அடுத்த மாதமே, மாஸ்கோவில் பாஞ்சாலிக்குக் கோயில் கட்டுவதற்கு ரஷியர்கள் திட்டமிட்டுக்கொண்டிருப்பது போலக் கருதிக்கொண்டு பேசி வருகிறார்கள்.

பொதுவாக, மதம் என்பதற்கே, நாங்கள் எமது ஆட்சி முறையில் இடமளிக்கவில்லை—என்று திட்டவட்டமாகக் குருஷாவ் கூறுகிறார் என்றால், வாய்மை, தூய்மை, ஒழுக்கம், அன்புடைமை, அறிவுடைமை எனும் எந்தப் பண்புக்கும் இடமளிக்காததும், மக்களைக் குருட்டறிவில் தள்ளுவதுமான புராண மதத்தையா, அங்கு சிந்துவர். சிரிப்புத்தான் வருகிறது, சிலர் இங்கு ரஷியாவில் இராமாயணம்—மாஸ்கோவில் பாரதம்—என்று பெருமையுடன் கூறும்போது.

இராமாயணத்தை, அங்கு குரங்கு, கரடி, இராட்சதன், மனிதன்—எனும் எல்லா ஜீவராசிகளுக்கும் தொடர்பு காணப்படும் ஒரு பழங்கால பாட்டி கதை என்று படிப்பார்களே தவிர, கோசலைச் செல்வன், மிதுலைச் செல்வி என்று கொண்டாடுவார்கள். பாரதத்தை, ஒருத்தி பலரை மணம் செய்து கொண்ட காட்டுமிராண்டிக் காலத்துக் கட்டுக் கதை என்று படித்துச் சிரிப்பார்கள், வேறென்ன, மாஸ்கோவில் பாஞ்சாலிக்குக் கோயிலா கட்டுவார்கள்.

★

# எட்டு நாட்கள்

**எட்டு** நாட்கள்! மரணத்துக்கும் அவனுக்கும் இடையே எட்டே நாட்கள் உள்ளன. தண்டனை தந்தாகி விட்டது, அவனைச் சுட்டெரிக்க, மாற்ற முடியாத தண்டனை—வேறு வழக்காடி நீதி கேட்கும் இடமும் கிடையாது—இன்று 1600-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் ஒன்பதாம் நாள்—எட்டு நாட்கள் உள்ளன, தண்டனை நிறைவேற்றப்பட! அவன்விரும்பினால், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம். "ஐயனே! அடிபணிகிறேன், அஞ்ஞானத்தால் நான் உளறிவந்தேன் இது நாள் வரையில். மெய்ஞ்ஞான போதகரே! என் பிழை பொறுத்திடுக! என் பிழை பொறுத்திடுக! என்று சொன்னால் போதும், தண்டனை இல்லை, சாவு இல்லை, வாழலாம், சிறப்புறக்கூட வாழலாம்! வரவேற்புகளும் பதவிகளும் வழங்கப்படும்! திருவிழாக் கோலத்துடன் உலவலாம்! பட்டத்தரசர்கள் கட்டித் தழுவிக்கொள்வர்-பாதகாணிக்கைபெறும் குருமார்கள் அன்புமுத்தம் அளிப்பர் —- மாளிகைகள் விருந்தளிக்கும்.

> அச்சம் அவனை அடக்கியதில்லை!
> ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை
> அரண்மனை கண்டு அவன் சொக்கினதில்லை.
> மாளிகையின் மதுரவாழ்வு வேண்டினவனல்ல.
> நிந்தனையை நிலாச்சோறு எனக்கொண்டவன்.
> வேதனையை வேண்டுமளவு உண்டவன்.
>
> **அவனுக்கு எட்டுநாள் அவகாசம் தந்தனர்!**
>
> **சாவா? வாழ்வா?**
>
> **எதுவேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொள்வதற்கு!**

எட்டே நாட்கள் உள்ளன அவன் ஒரு முடிவுக்கு வர.

வாழ்வா? சாவா? என்ற முடிவு—அவனே இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

அவன் கொல்லப்படவேண்டியவன்தான் என்று, ஆச்சாரியாரும் கூறிவிட்டார், அரச மன்றமும் தீர்ப்பளித்துவிட்டது. எட்டு நாட்கள் தவணை தருகிறோம், என்று தீர்ப்பளித்தோர் கூறிவிட்டனர்.

ஆண்டு அனுபவித்துவிட்டு, இனி ஆட அனுபவிக்க, இயலாத நிலையில் உள்ள படுகிழமல்ல—உலகம் மாயை, வாழ்வே அநித்யம், இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை என்று குளறும், வரட்டுவேதாந்தியுமல்ல; வாழ்வா? ஏன்? வாழ்ந்து நான் சாதிக்கவேண்டியது என்ன இருக்கிறது என்று பேசும் குழப்ப நிலையுடையோனுமல்ல, நடுத்தர வயதுடையவன் — உலகுக்கு உண்மையை அளித்தாகவேண்டும் என்ற ஆர்வம் கொழுந்துவிட்டெரியும் உள்ளம் படைத்தவன்—அவனைக் கட்டிவைத்துக் கொளுத்திச் சாகடிக்க உத்தரவு பிறப்பித்தனர்—அற மன்றத்தினர்—ஆம்! அறமற்ற செயல் புரியினும், அறமன்றமென்றே அது அழைக்கப்பட்டது. அறம்மட்டுமல்ல, அன்பு எனும் சீரிய பண்பினைத் தன் அகத்தே கொண்டது என்றும், அந்த மன்றம் கருதப்பட்டுவந்தது.

## சி. என். அண்ணாதுரை

அறம் ஏது? அன்பு எது? என்று மக்களிடம் எடுத்துரைக்கும் உத்தமன் அவன்—அவனுக்குத்தான் மரண தண்டனை — எட்டே நாட்கள் தரப்பட்டுள்ளன, முடிவுக்கு வர.

எட்டு ஆண்டுகள் சிறையிலே சித்திரவதைக்கு ஆளாகி, வேதனையால் கொட்டப்பட்டு, தலைமயிர் வெளுத்துப்போய், கண்ணொளி மங்கி, கைகால் சோர்வுற்று, உடலெங்கும் வெதும்பிக்கிடந்தான், — ப்ருனோ — இத்தாலி தந்த அறிவாளி!

ரோம் நகரச் சிறைக் கூடத்தில் தள்ளப்பட்டுக் கிடக்கும் அவன் முன், ஒரே பிரச்சினை நிற்கிறது, வாழ்வா, சாவா, என்று! அவன் வாழ்வது என்று முடிவுசெய்துவிட்டான் — எனவே அவனை எட்டாம் நாள் சுட்டெரித்துவிட்டனர்!!

வாழ்வு! என்ன பொருள் அதற்கு? உண்டு உலவி, உறங்கி எழுந்து, மீண்டும் உண்டு உலவிடும் வேலையை ஒழுங்காகச்செய்யும் யந்திரமா, மனிதன்? ஆதிக்கக்காரன் அடிபணிந்து, ஆர்ப்பரிப்போன் பாதம்பற்றி, குற்றேவல் செய்து கும்பியை நிரப்பிக்கொண்டு, கொத்தடிமையாகிக் குடும்பம் சமைத்துக்கொண்டிருப்பதா வாழ்வு? எத்தனிடம் சித்தத்தை ஒப்புடைத்துவிட்டு, ஏமாளியாகிக்கிடப்பதா வாழ்வு! அவன் அப்படி எண்ணவில்லை!! வாழ்வு, ஒருபெரும் பொறுப்பு, ஒரு அரும் வாய்ப்பு, உண்மையை அறிய, அறிந்ததன்வண்ணம் ஒழுக, பிறருக்கும் அந்த ஒழுக்கத்தை அளிக்க—அம்மட்டோ!—அந்த ஒழுக்கத்தை அழிக்கும் சழக்கருடன் போரிட்டு, அறமல்லாததை, விரட்டி ஓட்டி அறத்தை நிலைநாட்டப் பாடுபடல் வேண்டும். வாழ்வு, அதற்கான ஒருவாய்ப்பு! இந்தக் குறிக்கோளற்று இருப்பது, வாழ்வு அல்ல, என்று அவன் கருதினன். அவன்போல் ஒரு சிலரே எண்ணினர்—ஒரு சிலருக்கே அந்தச் சீரிய கருத்து இருக்க முடியும்—அந்த ஒருசிலராலேயே உலகு, மெள்ள மெள்ள மாண்பினைப் பெறுகிறது.

அவன் அறிந்து போற்றிய 'வாழ்வு' அவனுக்குக் கிடைத்துவிட்டது; கொடியோரால் அவன் சுட்டுக்கொளுத்

தப்பட்டான்—இன்று வாழ்கிருன்—என்றும் வாழ்வான்! அவன், அப்படிப்பட்ட 'வாழ்வு' தேவை, என்று தீர்மானித்தான், எனவேதான், சாகச் சம்மதித்தான்.

"எட்டே நாட்கள்!" என்றனர்! உயிரை இழக்க எப்படி மனம் துணியும். ஒன்று, இரண்டு, மூன்று என்று நாள் ஓட ஓட, அவன் நெஞ்சம் நெருப்பிலிட்டதுபோலாகும், அஞ்சுவான், கெஞ்சுவான், அலறுவான், அடிபணிவான், என்று தீர்ப்பளித்தோர் எண்ணிக்கொண்டனர்! அவர்கள், சிறையிலே தள்ளப்பட்டுக் கிடந்தவனின் உள்ளத்தின் மேன்மையை உணர முடியாத உலுத்தர்கள்.

"அரசை இழந்துவிடச் சம்மதித்தால், உயிரோடு இருக்கலாம்" என்ருல், அரசு இழக்கலாம், உயிர், இருக்கட்டும், உயிர் இருந்தால் புது அரசு கிடைத்தாலும் கிடைக்கும், இல்லை எனினும் பரவாயில்லை, குடும்பத்தாருடன் இனிது வாழலாம் என்றே, அரசாள்பவன் கூறுவான். அங்ஙனம் உயிர்தப்பினல் போதும் என்று மணிமுடியைக் கீழே வீசிவிட்டு ஓடின மன்னர்களின் கதையை அவன் அறிவான். அவனை அவர்கள் இழக்கச்சொன்னது

**"அறிவை!"**

இயலாது, என்ருன்; அறிவுவேண்டி நின்ற ஒரே குற்றத்துக்காக, அவனைச் சுட்டுக்கொல்வது என்று தீர்ப்பளித்தனர்.

அறிவு வேண்டுகிருன் — என்பதை எப்படிக் குற்றச்சாட்டு ஆக்க முடியும்? எனவே ப்ருனே ஒரு நாத்திகன் என்று குற்றம் சாட்டப்பட்டான்.

நாத்திகன்! இந்த ஒரு சொல்லைக் காட்டி, எத்துணைக் கொடுமைகளைச் செய்துள்ளனர்! எவரெவர்மீது அந்தச் சொல்லம்பு வீசப்பட்டது!

எது ஆத்திகம்? எது நாத்திகம்?

விளக்கம் தந்தனரா? இல்லை! எங்கு யார் ஆதிக்கத்தில் உள்ளனரோ அவர்கள் கொண்டுள்ள வழிபாட்டு முறையை ஏற்க மறுப்பவன், நாத்திகன் என்று குற்றம் சாட்டப்பட்டான். வழிபாட்டு முறையை மட்டுமல்ல, ஆதிக்கத்திலிருக்கும், எந்தக் கருத்தை ஏற்க மறுப்பவனும், மாறுதலான கருத்தைக்கொள்பவனும் விள்பவனும் நாத்திகர் எனப்பட்டனர்.

போப்பாண்டவரின் 'ஸ்ரீமுக'த்தைத் தீயிலிட்டபோது மார்டின்லூதர், நாத்திகனென்று, கத்தோலிக்க உலகினுல் குற்றம் சாட்டப்பட்டார். அதேபோல, இங்கிலாந்தில் பிராடெஸ்டென்ட் மார்க்கம் அரச மார்க்கமான பிறகு, கத்தோலிக்கர்களை அங்கு 'நாத்திகர்' என்று கூறினர்.

மார்க்க சம்மந்தமான பிரச்னைகளில் மட்டுமல்ல, அன்று ஆதிக்கத்திலிருந்த மத ஏடுகளிலும் அவைகளைத் துணையாகக்கொண்டு தீட்டப்பட்ட மற்றத் துறைகள் பற்றிய ஏடுகளிலும் காணப்பட்ட கருத்துகளுக்கு முரணை கருத்துகளைக் கொள்பவரை எல்லாம், நாத்திகர் என்றே குற்றம் சாட்டினர்—கடும் தண்டனை தந்தனர் —சித்திரவதை செய்தனர்.

அரசு முறை, அதன் தொடர்பான அறமுறை, வரி வசூலிக்கும் முறை, சமுதாய அமைப்பு முறை நடைநொடி பாவனைகள், எனும் எதிலும் அரச மார்க்கத்தின் மத ஏடுகளில் உள்ளபடியே சொல்லும் செயலும் அமைந்திருக்கவேண்டும் என்றனர்.

மனிதன் மனிதனை அடிமையாகப் பிடித்துவைத்து, வேலை வாங்குவதும், சந்தைச் சதுக்கத்தில் ஆடுமாடுகள் போல் விற்பதும், கொடுமையானது, அநாகரீமானது, அஃது அறமாகாது, என்று கருணையும் நேர்மையும் கொண்டவர்கள் வலியுறுத்திய போதுகூட, அந்த முறையீடு, நாத்தீகம் என்றே கூறப்பட்டது.

எனவே, ப்ருனே மீது நாத்தீகக் குற்றத்தை வீசியது, அன்றைய மனப்போக்கிலே, திடுக்கிடக்கூடிய, தனிச் சம்பவமல்ல.

*

ஜியார்டானே ப்ருனே, அன்று ஆதிக்கத்திலிருந்தவர்கள் எந்த அடிப்படையின்மீதமர்ந்து அரசோச்சி வந்தார்களோ, அந்த அடிப்படைக்கு ஆட்டம் கொடுக்கக்கூடிய, அறிவுப் பணியில் ஈடுபட்டிருந்தான். அவன் இருந்தால் தங்கள் ஆதிக்கம் அழிந்துபடும் என்று அஞ்சினவர்கள், அவனுடைய அறிவுப் பணியைத் தடுத்திடவோ, தகர்த்திடவோ முடியாத மூட மதியினர், அவனைக் கொன்ருல்தான், தாங்கள் வாழ முடியும், என்று எண்ணினர்—அவனும் சாகச் சம்மதித்தான்.

எட்டு நாட்கள் தவணை தந்தனர். ஏன்? நெஞ்சு உரமிக்கவன்தான் ப்ருனே, கொண்ட கொள்கைக்காகவே, ஆண்டு பல ஆபத்தால் வேட்டையாடப்பட்டு அலைந்துகொண்டிருந்தவன்தான், அச்சம் அவனை அடக்கியதில்லை, ஆசை அவனைக் கட்டுப்படுத்தியதில்லை, அரண்மனை கண்டு அவன் சொக்கினதில்லை, மாளிகை கண்டு மதுரவாழ்வு வேண்டி நின்றவனல்ல, நிந்தனையை நிலாச்சோறு எனக்கொண்டான், வேதனையை வேண்டுமளவு உண்டான், எதற்கும் சளைக்கவில்லை, எதனுலும் மனம் இளைக்கவில்லை; எனினும், மரணம் தன் குரூரக்குரல் கொடுத்து நிற்பதைத் காணும்போது, நாட்கணக்கிலே உயிர் ஒட்டிக்கொண்டிருந்ததை உணரும்போது, ஒரு வேளை, உயிரைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்று நெஞ்சிலே ஒரு சிறு ஆசைப் பொறி கிளம்புமோ, என்று எண்ணினர்; ஆவல்கொண்டனர்.

அவனைத் தண்டித்தவர்கள், வாழ்வின் சுவையைப் பருகிக்கொண்டிருந்தவர்கள், செல்வத்தைப் பெறுவதிலே ஓர் இன்பம் கண்டனர், செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதிலே வேட்டையாடும் மிருகமாக இருந்தனர்—வாழ்வு எவ்வளவு சுவைதருகிறது, மாளிகையில் வாழும்போது, மலர்த்தோட்டங்களிலே வீசும் மணத்தை உட்கொள்ளும்போது, மலரணிகொண்டைச் செருக்கிலே அவர் மையல் தரும் கண்ணின் மினுக்கிலே, உள்ள இன்பம் கொஞ்சமா, கூப்பிட்ட குரலுக்கு ஆட்கள் ஓடிவந்து கட்டளைக்குக் காத்துக்கொண்டிருக்கும்போது ஏற்படும் பெருமிதம் சாமான்யமா—பேழையிலே விதவிதமான அணிபணிமணிகள் மின்னும்போது கண்களிலே களிப்பு ஒளிவிடுகிறதே, பெரும்பதவிகள் கிட்டிடும்போது, மார்பு நிமிர்கிறது, நடையிலே ஒரு புது முறுக்கு ஏறுகிறது, பேச்சே புதிய பொலிவு பெறுகிறதே—இவைகள் எல்லாம் இன்பத்தேன் அல்லவா! இவ்விதமான வாழ்வைச் சுவைத்துக்கொண்டிருந்தவர்கள் — ப்ருனேவைத் தண்டித்தவர்கள். எனவே, அவர்கள், எதையும் ஏற்க நெஞ்சம் இடம்தரும் சாகமட்டும், துணிவு இராது, நாள் செல்லச் செல்ல, நெஞ்சு நெகிழும், ஆசை அரும்பும், உறுதி குலையும், ப்ருனே, உயிருக்கு மன்ருடுவான் என்று எண்ணினர். பெருமழை பெய்கிறது, மண்மேடு கரைகிறது, பாறை எப்போதும் போலத்தானே இருக்கிறது! ஏடு பல படித்த அந்த ஏமாளிகள், இந்தச் சிறு உண்மையை உணரவில்லை—ப்ருனே, வாழ்வு என்பதற்குக் கொண்டிருந்த 'தத்துவம்' தூய்மை நிரம்பியது, வீர உள்ளத்தில் மட்டுமே தோன்றவல்லது. சுயநலமிகளும் சுகபோகிகளும் சூது மதியினரும், அதனை உணர்தல் இயலாது.

எட்டு நாட்களா! என்னைக் கொல்லும் துணிவு இவர்களுக்கு உண்டாக, எட்டு நாட்கள் தேவைப்படுகிறதா! பயங்கொள்ளிகள்!!—என்றுதான் ஜியார்டானே ப்ருனே, எண்ணிக்கொண்டிருப்பானே தவிர, ஐயோ! எட்டு நாளிலே உயிர் இழக்கவேண்டுமா, என்று அஞ்சி இருக்கமுடியாது.

"நாத்திகனான உன்னைத் தீயிலிட்டுக் கொளுத்திச் சாகடிப்பது என்று தீர்ப்பளிக்கிறோம்" என்று அவர்கள் கூறியபோது, ப்ரூனோ பெருஞ் சிரிப்புடன் "இந்தத் தண்டனையைக் கேட்கும் எனக்கு அச்சம் இல்லை; இதைக் கூறும் உங்களுக்கு அச்சம் ஏன் இவ்வளவு இருக்கிறது!" என்று கேட்டான்.

அந்த நெஞ்சு உரத்தைக் குலைக்க, எட்டு நாட்களா! பேதைமை!!

*

என்றையதினம், ப்ரூனோ உண்மையை உரைத்திடுவதே தன் பணி எனக் கொண்டானோ, அன்றே அவன் அறிவான், தன்மீது குறிவிழுந்துவிட்டது என்பதை. எவ்வளவு காலத்துக்கு அவர்களிடமிருந்து தப்பித்திருக்க முடிகிறதோ அதுவரையில் தான் கண்ட உண்மையை உலகுக்குக் கூறிவருவது, என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தான். அந்தத் திண்மையை, கொடுமைகள் தகர்க்க முடியவில்லை! அவன் நாடு பல சுற்றி, பல அவைகளிலே நின்று, தன் கொள்கையைக் கூறினான்—போதுமான அளவுக்கு—இனிச் சாக அஞ்சுவானேன்—இறந்தால், கொள்கை இறந்துபடவா செய்யும்! இல்லை, இல்லை. மாறாக, கொள்கை பன்மடங்கு புதுவலிவும் பொலிவும் பெறும்—வளரும், பரவும், வெல்லும்! ப்ரூனோ, அந்த எட்டுநாட்களும், இதையன்றி வேறெதனை எண்ணிடப் போகிறான். குவித்துவைத்த பொன்னை யார் அனுபவிப்பார்களோ, குலவிவந்த கிளியை எந்தக் கூண்டிலே கொண்டுபோய் அடைப்பார்களோ, மனைவி மக்கள் என்னவென்று கூறிக் கதறுவார்களோ, என்று எண்ணி ஏங்கப் போகிறான். ப்ரூனோ, துறவி! தூர்த்தர்கள் பலர் அதனை வேலையாகக்கொண்டு, 'துறவி' எனும் சொல்லையே மாசுபடுத்திவிட்டனர்—எனவே ப்ரூனோவைத் 'துறவி' என்று கூறுவது, அவருக்கு உள்ள மாண்பினை பாதிக்குமோ என்று கூட அஞ்சவேண்டி இருக்கிறது. ப்ரூனோ, கொள்கைக்காகப் போரிடும் அஞ்சா நெஞ்சினன்-வாழ்க்கையில் இதற்காகவன்றி வேறு எதற்கும், அவருக்கு நேரமும், நினைப்பும் கிடையாது. எனவே, எத்தனை நாள் தவணை தரப்பட்டாலும், நெஞ்சு தடுமாறாது! அந்த நெஞ்சம் அவ்வளவு உறுதிப்பட்டுவிட்டிருக்கிறது. நச்சு நினைப்பினர் அதனை அறியார்.

ஏன், அவர்கள், ஜியார்டானோப்ரூனோ, மடிவதைவிட மனம் மாறிவிடுவது நல்லது என்று எண்ணினர்? நாத்தீகன் ஒழியத்தானே வேண்டும்? ஏன் பிழைத்துக்கொள்ள வாய்ப்பளிக்கின்றனர் — புனித மார்க்கத்தை ஏற்றுக்கொள், பூஜ்யர்களை வணங்கு, உயிர் பிழைக்கலாம் என்று ஏன் கூறினர். நேர்மையும் ஈரமும் கொண்டனரா? இல்லை! சிங்கத்தைக் காலடியிலே விழச்செய்தால், காண்போர், எவ்வளவு பெருமை தருவர்! சிறு நாய்கள் நத்திப் பிழைக்கின்றன — பார்த்துப் பார்த்து அலுத்துவிட்டது நரிகள் பதுங்கிக்கொள்கின்றன — தேடுவதே கஷ்டமாகி விடுகிறது. இதோ சிங்கம்—வீரமுழக்கத்தை எழுப்பிய வண்ணம் இருக்கிறது! வலையில் வீழ்வதில்லை: கணைக்குத் தப்பிவிடுகிறது—காடு ஒன்றிலே வேட்டையைத் துவக்கினால், வேறோர் காடு சென்றுவிடுகிறது-எங்கு சென்றாலும் முழக்கம்!! இந்தச் சிங்கத்தை, இந்த ப்ரூனோவை, இந்த அஞ்சா நெஞ்சினனை, 'மனமாறிவிட்டவனாக்கினால்' சில தலைமுறைகள் வரையிலே, அறிவுத்துறையிலே ஈடுபடவும் ஆட்கள் முன்வருவரா? "அப்படிப்பட்ட அசகாய சூரன்! ஆண்டு பலவாக, மார்க்கத்தை மதிக்க மறுத்து மனம் போன போக்கிலே புதுமை புதுமை என்று பொல்லாக் கருத்துக்களைப் பேசித் திரிந்தவன், என்ன ஆனான், கடைசியில், கண்ணீர் பொழிந்தான், காலடி வீழ்ந்தான், கண்டுகொண்டேன் உண்மையை, என்று இறைஞ்சினான்! —என்று கூறிக்கொள்ளலாம் அல்லவா! பகுத்தறிவு கருவில் இருக்கும்போதே கருக்கிவிட இதைவிட வாய்ப்பு வேறு கிடைக்குமா! எனவேதான், ஜியார்டானோப்ரூனோவுக்கு மரண பயத்தைக் காட்டி, பணியவைக்கலாம் என்று ஆவல் கொண்டனர்.

எட்டு நாள் தவணை! ஒரு தனி மனிதனுடைய, ஒரு மாவீரனுடைய உயிர் இருப்பதா பறிக்கப்படுவதா என்பதல்ல, முழுப் பிரச்சினை, உண்மையான பிரச்னை, பகுத்தறிவுக்கு, இனியும் இடம் உண்டா, அல்லது இந்த எட்டே நாட்களிலே, அது சுட்டுச் சாம்பலாக்கப்படுவதா என்பதுதான். ப்ரூனோ இதை நன்கறிந்தே, என்னைச் சுட்டுச் சாம்பலாக்கட்டும்—அறிவு கொழுந்துவிட்டு எரிந்த வண்ணம் இருக்கட்டும் என்று கூறினான்—செயலால்!!

ப்ரூனோ, எப்போதும் தனக்காக அஞ்சினதில்லை—ஆண்டு பல கஷ்டப்பட்டதால் உள்ளத்தில் உரம் மெருகாகிவிட்ட இந்த நிலையில் மட்டுமல்ல—சிறுவனாக இருந்த போதே.

பதினைந்து வயதுச் சிறுவன் ப்ரூனோ, டாமினிக்கன் மடாலயத்திலே சேர்ந்தபோது: ஆர்வமும் நம்பிக்கையும் அதிகமாக இருந்தது மடாலயத்திலே சேரும்போது. அங்குதான் அறிவுத்தாகம் தீரும் என்று எண்ணிச் சென்றான்.

புது நெறிகள் புரட்சிபோலக் கிளம்பி, கத்தோலிக்க மார்க்கத்தைக் குலைத்தபோது, வெடிப்புகளை மூடவும்' வெதும்பியதைக் களையவும், பூச்சுகளைப் புதுப்பிக்கவும், எடுத்துக்கொள்ளப்பட்ட பல முயற்சிகளிலே, டாமினிக் தேவாலய இயக்கம் ஒன்று. தூயநெறி நிற்பது, தூய்மையைப் பரப்புவது, வழி தவறியவர்களை மீண்டும் நன்னெறி கொண்டுவந்து சேர்ப்பது, என்ற நோக்கத்துடன், கற்றறிவாளர்கள், கர்த்தரின் சுவிசேஷம் உணர்ந்த வித்தகர்கள், துவக்கியது, டாமினிக், மடாலயம்.

நாத்தீகத்தை நசுக்குவதற்கான நல்லதோர் ஏற்பாடு என்றனர் இதனை—அது உலகு வியக்கும் அறிவுத் திலகம் ப்ரூனோவை, அளிக்குமென்று, எவ்வளவோ 'ஜெபதபம்' செய்தும், டாமினிக்துறவிகளுக்குத் தெரியவில்லை. அறிவுக் கூர்மையுள்ள வாலிபர்களை, அவர்களைப் பாசம் பற்றிக் கொள்ளா முன்னம், ஆலயக் கல்லூரியில் கொண்டு சேர்த்து, ஐயன் பெருமைகளைக்கூறி, நல்ல 'சாமியார்' ஆக்கிடும் வேலையில், டாமினிக் மடாலயம் ஈடுபட்டிருந்தது. ப்ரூனோ, மடாலயம் அளித்த கல்வியைக் கற்றான்—ஆனால் கசடுஅறக் கற்றான்! இவனை, மடாலயக் கல்லூரியில் சேர்த்து, அன்பும் அக்கரையும் காட்டிய ஆன்ஸ்லம் பாதிரியாருக்கு ப்ரூனோ, புன்னகை பூத்த முகம் படைத்த வாலிபனாகத் தெரிந்தபோதிலும் அவன் உள்ளம், இத்தாலி நாட்டு வெசுவயஸ் எரிமலை போன்றது என்பது புரிந்துவிட்டது; அஞ்சினார். மடாலயத்திலே இருக்கும்போதே ப்ரூனோ ஒரு சிறு ஏடு தீட்டினான்—வெசுவயஸ் கொஞ்சம் நெருப்பைக் காட்டிற்று! பொறிகளைக் கண்ட ஆன்ஸ்லம் பாதிரியார், "மகனே! வேகமாக ஆபத்தை நோக்கிச் செல்கிறாய்" என்று எச்சரித்தார். ப்ரூனோ பதறவில்லை—புன்னகை பூத்த முகத்துடன் நின்றான்.

மடாலயச் சாமியார்களின் மந்த மதியையும் கோலாகல வாழ்வையும் கேலி செய்து, ப்ரூனோ அந்த ஏட்டிலே தீட்டியிருந்தான், அவனுடைய நெஞ்சிலே, நாத்தீக அரவம் குடிபுகுந்துவிட்டது, என்று சந்தேகித்த, பாதிரிகள், 'விசாரணை' நடத்தத் திட்டமிட்டனர்—மதவிசாரணை அதிகாரியும் அழைக்கப்பட்டிருந்தார். இதை அறிந்ததும் ஆன்ஸ்லம் பாதிரியார் அலறிப்போனார். ப்ரூனோ சிறுவன், நாட்டிலே நடைபெறுவது, அதிலும் மக்களின் 'பூஜை'யைப் பெற்றுக்கொள்ளும் மடாலயத்திலே நடைபெறும் முறை அவனுக்கு என்ன தெரியும்—ஆன்ஸ்லம் அறிவார்! விசாரணை என்றால் என்ன? கொடுமைக்கு வேறோர் பெயர்

தானே! கனல்கக்கும் கண்படைத்த கொடியவர்கள், ஈவு இரக்கமற்ற நெஞ்சினர்கள், உருட்டி மிரட்டும் கண்ணினர், உட்காருவர்; எதிரே நிறுத்தப்படுபவனைக் கேள்விகள் கேட்பர்; அந்தக் கேள்விகள் ஏதன் பொருட்டுக் கேட்கப்படுகிறது என்று அறியாமல், பதில் கூறுவான்; அந்தப் பதிலிலே பொதிந்துகிடக்கும் பொருளைத் துருவிப் பார்த்து. இவன் நாத்தீகன்தான் என்பர்! —தீர்ந்தது. கடும் தண்டனை! சிறை கிடைக்கலாம், அவர்கள் சீற்றம் அதிகம் கொள்ளாதிருந்தால். சித்திரவதை செய்வது, வழக்கமான சாதாரண தண்டனை!

இந்த 'விசாரணை' ஏற்பட இருக்கிறது, ஜியார்டானோவுக்கு, அந்தத் துணிவுள்ள வாலிபன், வானத்தின் வண்ணத்தைக் கண்டு களிக்கிறான்—அலையின் ஒலி கேட்டு மகிழ்கிறான்—கொத்துக் கொத்தாகக் காய்த்துக் குலுங்கும் திராட்சைகள் நிரம்பிய கொல்லையைக் காண்கிறான், எங்கும் தெரியும் இயற்கை எழிலை ரசித்துக்கொண்டிருக்கிறான்.

"மகனே! மகனே! வர இருக்கும் ஆபத்து அறியாமல் கிடக்கிறாயே" என்று கூறியவண்ணம் வந்த ஆன்ஸ்லம் பாதிரியார், மடாலய ஏற்பாட்டைக் கூறினார்—நடுக்கும் குரலில்.

"நான் அறிவேன்! நான் அறிவேன்! விசாரணை என்றால் என்ன என்பதை நான் அறிவேனடா ஜியார்டானோ" என்று வேதனை ததும்பும் குரலில் அவர் கூறியபோது, ப்ரூனோ, "அஞ்சாதீர் ஐயனே! அஞ்சாதீர்! என்பொருட்டு அஞ்சாதீர்! ஏனெனில் என் பொருட்டு நானே அஞ்சவில்லை!" என்று கூறினான்!

*

அந்தப் ப்ரூனோ இப்போது தணலில் போட்டு எடுக்கப்பட்ட தங்கமாகிவிட்டிருக்கிறான். ஆபத்தெனும் அகழிகளைத் தாண்டியிருக்கிறான், கொடுமையூர்களைக் கடந்திருக்கிறான், வெறுப்பு வெப்பத்திலே மூழ்கி எழுந்திருந்து இருக்கிறான்—இப்போதா அஞ்சப்போகிறான்! யானைக் கொல்லக் குதித்த சிங்கக்குட்டி, பெரும் பிடரிபடைத்த காட்டரசனான பிறகு, மத்தகத்தை அல்லவா பிளக்கும்—முயற் கூட்டம் கண்டா ஓடி ஒளியும்!! நீலநிற வானத்தையும் பச்சைப் பசேலென்ற தோட்டத்தையும் கண்டதும் பரவசப்படும் வாலிபன், "என்னைப்பற்றி நான் அஞ்சவில்லை" என்று சொன்னான் என்றால், இப்போது, அந்த நெஞ்சு உரம், எதிரியின் உறுதியை முறியடிக்கும் வகையினதாகத்தானே ஆகிவிட்டிருக்கும். இடைக்காலத்திலே அவன் சுகத்துக்கும் சுயநலத்துக்கும் பலியாகிவிட்டிருந்தால், கோழைத்தனம் தோழமை கொண்டுவிட்டிருக்கும். அன்று மடாலயத்திலிருந்து தப்பி ஓடிவந்த ப்ரூனோ தன் அறப்போரை நிறுத்தியபாடில்லை — பயணத்தை முடித்துக்கொண்டானில்லை!

நெஞ்சு உரம், ப்ரூனோவுக்கு சிறுவயது முதல் இருந்துவந்த, பெருந்துணை. அதை எட்டாண்டு சிறை கெடுக்கவில்லை. இன்னும் இருப்பது எட்டே நாட்கள்! நெஞ்சு உரம் குலைக்கப்படும் என்று எண்ணினவர்கள், ப்ரூனோவின் குணம் அறியாதவர்கள்!

கோழைகளை அவர்கள் மிரட்டிப் பணியவைத்திருக்கிறார்கள்.

கொடுமைகளை ஓரளவுக்குமேல் அனுபவிக்க முடியாத வலுவற்றவர்களை அவர்கள் அடிபணியவைத்திருக்கின்றனர்.

ஆசைக்கு ஆட்படுபவர்களை அவர்கள் பாசவலையில் வீழச்செய்திருக்கிறார்கள்.

ப்ரூனோ, இந்தக் கயவர் வலையிலே, சிக்க மறுக்கும் வீரன்!

சரண்புகுந்தால், ப்ரூனோ போன்ற கற்றறிவாளனுக்கு, வைதீகபுரியில், எந்தக் காணிக்கையும் பெறத்தக்க குருபீடம் கிடைத்திருக்கும். காரணம் கேளாது, பொருள் அறிய முயற்சிக்காது, ஆபாசம் என்று தோன்றினாலும் அதற்கு ஏதேனும் உட்பொருள் இருக்கும் என்று நம்பிக்கொண்டு, மத ஏடுகளை, மனப்பாடம்செய்து, அவ்வப்போது சிறிது சிறிது கக்கிவிட்டு, அதனை அருள்வாக்கு என்று எண்ணும் ஏமாளிகளிடம், பொன்னும் புகழும், பூஜையும் தொழுகையும் பெற்றுக்கொண்டு, முடியுடை மன்னரையும் தன் பிடியிலே வைத்துக்கொண்டு, தம்பிரானாக—சன்னிதானமாக, வாழ்ந்து வந்தனர் பலர்—அறிவுத்தெளிவிலே, ப்ரூனோவிடம் நெருங்கவே முடியாத குறை மதியினர்! ப்ரூனோ, கற்றறிவாளன்; அவன் சொற்பொழிவு, கரும்பென இனிக்கும் தரத்தது; எத்தகைய கடினமான பொருளையும் அவன் எளிதாக்கிடும் வண்ணம் பாடம் கூறவல்ல பேராசிரியன்; சலிப்பளிக்கும் தத்துவத்தையும், தேஞ்க்கித் தரும் தெளிவுரை கூறவல்லான்; பாரிசிலும், இலண்டனிலும், பதுவாவிலும், வட்டன்பர்க்கிலும், அவனிடம் பாடம்கேட்க வந்த வாலிபர்கள், சொக்கி நின்றனர்; எந்தப் பேராசிரியனுக்கும் கிடைக்காத பெரும்புகழ் அவனைத் தேடிவந்தது! அத்தகைய ப்ரூனோ, ஒருகணம், சபலத்துக்கு ஆட்பட்டு, ஆசைக்கு அடிமைப்பட்டு, ரோம் நகரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் போப்பாண்டவருக்குச் சரணம், என்று கூறிவிட்டிருந்தால் போதும், தேவாலயக் கதவுகள் திறந்து இருக்கும், அருளாலயங்களிலே குவிந்து கிடந்த செல்வத்திலே புரளலாம், அரசர்கள் அஞ்சலிசெய்வர்! நடவடிக்கையைப்பற்றிக் கூடக் கவலைப்பட வேண்டிய தில்லை; பக்தர்கள், பாதிரிகளின் உபதேசத்தின் சுவையைத்தான் தரம் பார்ப்பார்களே தவிர, நடவடிக்கையைப்பற்றித் துளியும் கவலை கொள்ளமாட்டார்கள்; நாற்றம் வெளியே தெரியாமலிருக்கும் பக்குவம் அறிந்திருந்தால் போதும். உபதேசம் செய்வதிலே, உருக்கம் இருந்தால்போதும், நம்பிக்கை இருக்க வேண்டும் என்பதுகூட வேண்டப்படுவதில்லை. ஒரு பெரிய மத அதிபர், "ஏசுநாதர்பற்றிக் கட்டிவிடப்பட்டுள்ள சுவையான கதை, எவ்வளவு சுகபோகத்தையும் செல்வத்தையும் நம்க்கு அளிக்கிறது!" என்று கூறிப் பூரித்தாராம்! அப்படிப்பட்ட காலம் அது, ஜியார்டோனோ ப்ரூனோ இசைந்திருந்தால் போதும், குருபீடம் கிடைத்திருக்கும்.

ஆனால், சொந்த இலாபம், சுகபோகம், என்பவைகளில் துளியும் பற்றுக்கொள்ளாத துறவி அவர்!

*

"பாரிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவி உமக்கு அளிக்கப்பட இருக்கிறது, ஜியார்டானோ!" என்று கூறினார், அரசர்!

"இறையே! எனக்கா? இதற்குள்ளவா? நான் அத்தகுதி பெற்றவனா?,, என்று, கேட்கிறார் ப்ரூனோ.

"பகட்டுடை அணிந்து, பசப்புகளிலே மனதைப்பறிகொடுத்து விடும், பாரிஸ் பட்டிண வாலிபர்களையே, உமது பேருரைகளால் திருத்தவும், திரட்டவும் முடிகிறதே! உம்மையன்றி வேறுயார், அந்தப்பதவிக்கு ஏற்றவர், பேராசிரியரே!" என்று கேட்கிறார் மன்னர்.

மடாலயத்தில், விசாரணைக் கொடுமையிலே சிக்கிக்கொள்ளாதிருக்க, ஆன்ஸ்லம் பாதிரியார் யோசனைப்படி, ப்ரூனோ, இரவில், பலகணி வழியாகக் கயிற்றின் துணைகொண்டு இறங்கி,ஓடினார்—ஊரைவிட்டு—இத்தாலியை விட்டு. சுவிட்சர்லாந்து நாடு கடந்து, இடையே பல இடங்களில் தங்கி, கடைசியாக பாரிஸ் வந்துசேர்ந்தார்.

பிரான்சிலே அரசோச்சி வந்த மூன்றுவது ஹென்ரி என்பவர், பாரிஸ் பட்டிணத்தில் தத்துவத்துறைச் சொற்பொழிவாளராகக் கீர்த்தி பெற்ற, ப்ரூனோவைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரை ஆதரித்தார்; அரண்மனையில் இடம்தந்தார், அங்குதான் அவர் ப்ரூனோவுக்குச் செய்தி தருகிறார், பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் வேலைக்கு, அழைப்புக்கிடைத்திருப்பதாக.

ப்ரூனோவுக்கு, பல்கலைக்கழகத்தைப் பாசறைகளாக்கி, மாணவர்களை அறிவுத்துறை வீரர்களாக்கி குருட்டறிவை விரட்டும் போரிடவேண்டும் என்பதுதான், குறிக்கோள். இத்தாலியில், குருட்டறிவு, அரசமார்க்கமாகிவிட்டிருந்தது; இருட்டறையில் தள்ளி இம்சிக்கும், அருளாளர்களின் ஆதிக்கம் மிகுந்திருந்தது; எனவேதான், ப்ரூனோ ஓடிவந்துவிட்டார். பாரிஸ் பல்கலைக் கழகம், பிரான்சு நாட்டிலே புதிய புகழ்பெற்று வருகிறது! புதுமைக் கருத்துகளை வரவேற்கும் கூடமாக அது விளங்கிற்று. பழமைக்குப் பாசறையாக, சோர்போன் பல்கலைக் கழகமும், புதுமைக்குப் புகலிடமாக பாரிஸ் பல்கலைக் கழகமும் விளங்கின. ப்ரூனோவுக்கு, உண்மையிலேயே பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பணியாற்றுவதிலே, பெருமகிழ்ச்சி—எதிர்பார்த்த இன்பம் கிடைக்கிறது என்றுதான் பொருள்.

மன்னன், மகிழ்வூட்டும் செய்தியைக் கூறியதும், ப்ரூனோ, விரும்பிய வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணிக் களித்தார். ஆனால், பேரிடி உடனே வந்தது.

பல்கலைக் கழகத்தில் பணியாற்றுவதற்கு ஒரு நிபந்தனை உண்டு; மன்னர் அதனைக் கூறினார். கூறுமுன் கேட்டார், "ப்ரூனோ! ஏன், தேவாலயத் தொழுகைகளிலே நீர் கலந்துகொள்வதே இல்லை!" என்று. கேட்டுவிட்டுச் சொன்னார், "பல்கலைக் கழக ஆசிரியர் என்ற முறையில், நீர், கத்தோலிக்க முறைப்படி உள்ள தொழுகை நடத்த வேண்டும் தேவாலயத்தில்"

"என்ன சொல்கிறீர், மன்னா! தொழுகையா? பேராசிரியர் வேலைக்கு அது நிபந்தனையா?" என்று கேட்கிறார், ப்ரூனோ; அச்சம் தலைகாட்டுகிறது.

'ஆமாம்! ஆசிரியரைப்பார்த்துத்தானே மாணவர்கள் நடந்துகொள்வர்; தொழுகை முக்கியம்" என்றார் மன்னர், இதில் என்ன இடையூறு என்று எண்ணிய வண்ணம்.

மகிழ்ச்சி கருகலாயிற்று, விசாரம் கொண்டார், ப்ரூனோ.

"தத்துவம், நரன் போதிக்கப்போவது; மதமல்ல; தொழுகைக்கு நான் சென்றாகவேண்டுமென்று நிபந்தனை ஏன், மன்னா!" என்று கேட்கிறார்.

"வீணான குழப்பம்! தொழுகை சடுதியில் முடிந்துவிடும், ப்ரூனோ! காலம் வீணாகுமே என்று கவலையோ" என்று மன்னர் வேடிக்கையாகவே பேசுகிறார்.

"முடியாது, வேந்தே!"

"முடியாதா? தொழுகையா?"

"ஆமாம், அரசே! நான் தொழுகை செய்து நீண்ட காலமாகிவிட்டது"

"தொழுகை, கத்தோலிக்கரின் நீங்காக் கடமை, ப்ரூனோ! தவிர்க்கக்கூடாத கடமை"

"நான் கத்தோலிக்கனல்ல, காவலா! கத்தோலிக்கனல்ல!"

"மெள்ளப் பேசு, ப்ரூனோ, மெள்ளப் பேசு. கத்தோலிக்க மதமல்லவா, நீ! எவ்வளவு வேதனை! அப்படியானால், லூதர் கூட்டத்தவனோ?"

"இல்லை, அரசே!"

"கால்வின் கூட்டமோ?"

"அதுவுமல்ல! அரசே! நான் கத்தோலிக்கனுமல்ல, லூதர், கால்வின் ஆகியோர் முறையினனுமல்ல; நான் ஒரு தத்துவாசிரியன்; நெடுநாட்களுக்கு முன்பு நான் டாமினிகன் பாதிரியாக இருந்தேன் — மடாலயத்திலே பயின்றேன்; "அங்கு நான் அறிந்துகொண்ட உண்மைகள், என்னை எம்மதத்திலும் இருக்கவிடவில்லை"

"மதமற்றவனா! அப்படியானால்.........ப்ரூனோ!.........நீ, நாத்திகன்......அல்லவா......எவ்வளவு வேதனை......என் ப்ரூனோவா இப்படி......"

(வளரும்)

# கொடுமை! கொடுமை!!

"கைவிடுங்கள்! கைவிடுங்கள்!!" என்று கேட்டார்கள்.

"அக்கிரமம்! அநியாயம்!" என்று கண்டித்தார்கள்.

"ஏழைகளை முன்னேறச் செய்யும் வழியாமோ, இது?," என்று கேட்டார்கள்.

"எதிர்க்கட்சி M.L.A.க்களாகிய நாங்கள் எல்லாம், சபையைவிட்டு வெளியேறுகிறோம். சர்க்காரே! உங்களுடைய தகாப் போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக" என்று அறைகூவல் விட்டுவிட்டு, வெளியேறினார்கள்.

* * *

டாக்டர் லட்சுமணசாமி, பாலசுப்ரமண்ய அய்யர், பாஷ்யம் அய்யங்கார், ஓமந்தூரார்.

இதுபோல, அரசை நேரிடையாகத் தாக்காதவர்களும்—அரசாளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சர்க்காரின் போக்கை எதிர்த்து மேல் சபையில் கண்டனமாரி மொழிந்தார்கள்.

* * *

எனினும், என்ன! அந்த மசோதா சட்டமாகிவிட்டது.

சட்டசபை, மேல்சபை இரு இடங்களிலும் சரமாரியான ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளான அந்த மசோதாவைச்சட்டமாக்கிவிட்டார், மாணிக்கவேலர்.

காங்கிரசுக்குப் 'பலி'யாகியதால் மாணிக்கவேலர், ஏற்படுத்திக் கொள்ளும் இரண்டாவது, மாசு, இந்தச் சட்டமாகும்.

விவசாயிகளுக்கு அதிகவரி போடும், சட்டம் இது! — எனவேதான் இவ்வளவு எதிர்ப்பும், கண்டனமும்.

ஒரு ரூபாய்க்கு அணா இரண்டு வீதம், அதிக வரி வாங்கப்படுமாம்—இனிமேல்.

அறிக்கைமேல் அறிக்கை வருகிறது, அனுதினமும் — பொருளாதார நிபுணர்களிடமிருந்து. இந்திய உபகண்டத்திலேயே தென்னாட்டில் வாழும் விவசாயிதான், குறைவாகச் சம்பாதிக்கிறான்—தென்னாட்டில் வாழும் குடியானவன்தான், அதிக நாட்கள் வேலையின்றிக் கிடக்கிறான்—தென்னாட்டில்தான் விவசாயப் பொருளுக்கு குறைவான விலைகொடுக்கப்படுகிறது; என்றெல்லாம்.

குறைவான வாழ்வு! குறைவான ஊதியம்!!

கூக்குரல் எழாத நாளில்லை, ஏழையின் இல்லத்திலிருந்து—கிராமங்களுக்குள் நுழைந்தால் குட்டிச் சுவர்களைக் காட்டுகிறார்கள் குடியானவர்களின் வீடு என்று சொல்லி—கோவணாண்டிகளாக நிற்கிறார்கள் அவர்களுடையபிள்ளைகள் —பருவமான பெண்ணொருபக்கம்,

அவளுக்கு 'திருமணம்' செய்ய பணமில்லையே என்று பரிதவிக்கும் நிலையில் பலர் — 'உழவுமாடுகள் விலை உயர்ந்துவிட்டதே எனும் ஓலம்! — மண்வெட்டி செய்ய இரும்பு ஏகக் கிராக்கியாயிருக்கிறதே, என்கிறார்கள் — இடுப்பொடியப் பாடுபட்டு, நிலத்தில் விளையும் விளைச்சலைக் கொண்டுதானே உப்பு, புளி, மிளகாய் உட்பட எல்லாப் பொருள்களையும் நாங்கள் வாங்கவேண்டியிருக்கிறது என்று பஞ்சடைந்த கண்களால் சொல்லுகிறார்கள் — இப்படி, விவசாயிகளுக்கு ஓய்வு நேரத்தில் ஏதாவது செய்து சம்பாதிக்க வழியில்லாதநிலை மாறாத வரையில் கிராமப் பொருளாதாரம் உயராது என்கின்றனர், அறிஞர்கள். நிலைமை, இது! என்றாலும், சர்க்கார் 'கிஸ்தி'யை உயர்த்துகிறது.

செல்லுமிடந்தோறும் செப்புகிறார் காமராஜர், "பணக்காரர்களை ஆதரிப்பது காங்கிரசின் லட்சியமல்ல. அவர்களிடமிருக்கும் பணம், ஏழைகளின் நன்மைக்காக எடுத்துச் செலவிடப்படவேண்டும்", என்பதாக. தேனாக இருக்கிறது, பேச்சு!

செயலோ, எட்டிக்காய்! ஏழையின் இடுப்பொடிக்கும் வேதனை!

அதிகவரி தேவையாம் — எதற்கு ஐயா, அதிகவரி? என்று கேட்டால், அந்த வரியை வாங்கி, கிராமங்களில் செப்பனிடப்படாமல் கிடக்கும் ரோடுகளைச் சரி செய்யப் போகிறார்களாம்! ரோடுபோட வரி!

முன்பு, பாலம் கட்ட வரி, கால்வாய் புதிதாகக் கட்டுவதற்காக வரி என்று சொல்லி (Better ment Tax) போட்டார்கள்! எங்கெங்கு, அணைக்கட்டும், புதிய நீர்ப்பாசன திட்டங்களும் நிறைவேற்றப்படுகிறதோ அந்தப்பகுதிகள் தாங்கள் அடைகின்ற நன்மைக்காக செலுத்தவேண்டும், தீர்வை என்று! இப்போது ரோடுபோட, புதுவரி! இந்த அதிகத் தொகையை வாங்கி, பஞ்சாயத்துக்களுக்கும், மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கும் வழங்குமாம் சர்க்கார் — அவைகள், நன்மைகளைச் செய்யுமாம்.

விவசாயி சாதாரணமாகச்சர்க்காருக்கு வரி செலுத்துவதே, ஆளும் சர்க்கார் தனக்கு வேண்டிய தேவைகளைச் செய்யும் என்பதற்காகத் தான்

இப்படித்தான், வெள்ளையன் காலத்திலும் வரி செலுத்திக் கொண்டு, வாழ்க்கை வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தான்!

அடிக்கிறான், கொள்ளை! மூட்டை கட்டுகிறான் வெள்ளையன்! — என்று, கர்ஜித்தார்கள், அப்போது, காமராஜர்கள்.

இப்போது, அதிக வரி வேண்டுமாம்! அப்போதுதான் பஞ்சாயத்துக்களுக்கு உதவமுடியுமாம்!

அப்படி பஞ்சாயத்துக்களுக்கும், மாவட்டபோர்டுகளுக்கும் என்று சொல்லி வசூலிக்கப்படும் "செஸ்", முன்பு ரூபாய்க்கு 2 அணா என்று இருந்ததை 3 அணா ஆக்கினோம்; இப்போது 3 அணா என்று இருப்பதை 5 அணா ஆக்குகிறோமே! நியாயமா! — என்று, கேட்டிருக்கிறார், ஓமாந்தூரார்.

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால், இதன் பலனை மக்களிடமிருந்து நாம் அனுபவிக்க வேண்டி நேரிடும் — என்றும் எச்சரித்துள்ளார்.

கேட்டவர்கள், யார்! 'மெஜாரிடி' பலம் இருக்கிறது என்கிறகாரணத்தால், மசோதாவை, சட்டமாக்கி விட்டார்கள்.

'ஆவடி' சோஷியலிசம் பற்றி வானளாவப் பேசும் தேசிய வீரர்கள், அதிகவரி போடத்தான் முடிவு செய்தார்களே, அதனை நிலப்பிரபுக்களுக்கு மட்டும் போட்டு, ஏழை எளியவனைவிடக்கூடாதா? செய்யவில்லை, அப்படி! எல்லோரும்தான், கொடுக்கவேண்டும்.

தஞ்சை, கதறுகிறது' — தண்ணீர்ப்பாசனம், சரிவர இவ்வாண்டு வராததால், விளைச்சல் பாதிக்கப்பட்டுவிட்டதாக. இந்த நேரம் பார்த்து, இப்படியொரு சட்டம்! அதிகவரி கட்டு — என்றோர் மசோதா!

அதிகரிக்கும் இரண்டணா இருந்தால், ஏழைக் குடியானவனுக்கு பதினைந்து நாளைக்கு எரிக்க மண்ணெண்ணெய் வாங்கலாம் அவன், ஒரு ரூபாய் வரி செலுத்துபவனாயிருந்தால்.

பத்துரூபாய் வரி கட்டுபவனுக்கு, ரூபாய் ஒன்றேகால்! — நாலுமுழத் துண்டுக்காயிற்று.

இருபது ரூபாயைக் கட்டுபவன், அதிகரிக்கும் 2½ ரூபாயைக் கொண்டு, தன் கஷ்டங்களிலே எதையாவது ஒன்றைத் தீர்த்துக் கொள்ளலாம்.

எனினும், அடிக்கிறது, அவர்கள் தலையில் சர்க்கார்! அதிகவரி கறக்கப்போகிறது!

இந்த லட்சணத்தில், ஐந்தாண்டுத் திட்டமாம் — அதன்படி, மண்ரோடுகள் மாறுமாம் — கிராமங்கள், புதுமை நிறைந்து பொலிவுறுமாம்.

ஒரு பக்கம், அந்தப் பிரச்சாரம்! இன்னொரு பக்கம் ரோடுபோட, வரி கொடு என்று சட்டம்!

விந்தையாயிருக்கிறது, காங்கிரசாட்சி — இவ்வளவு வேதனையையும் வீசும் காமராஜர், அனுதினமும், 'நன்மை செய்கிறோம்! நன்மை செய்கிறோம்' என்று நலங்கு பாடுகிறார், செல்லுமிடந்தோறும்.

நல்லோர் கண்டிக்கிறார்கள்! நாடும், கலங்குகிறது? — என்ன செய்வது? இந்தக் கொடுமைகளை அனுபவிக்கத்தான் சுதந்திரம் பெற்றோம், போலும்!

★

## வாழ்க! வாழ்க!!

பச்சயப்பன் கல்லூரித்தமிழ்ப் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் இளவலும், விருதைக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமான புலவர் க திருமாறன் — பத்மா வாழ்வு விழா, 12-9-55 அன்று சென்னை புரசையில் டாக்டர் மு.வரதராசனார் தலைமையில் நிகழ்ந்தது. அண்ணாதுரை, பேராசிரியர் சேதுரகுநாதன், தியாகராயர் கல்லூரித்தலைவர் எம்.கே.சண்முகம், மு.கருணாநிதி, ஈ.வி.கே.சம்பத், கே.ஏ. மதியழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வாழ்க பத்மா-திருமாறன்!

## "காவியம்"

தோழர் சுரதா அவர்களை ஆசிரியராகக்கொண்டு, வெளிவரும் 'காவியம்' எனும் இதழைக் கண்டோம், களிப்புற்றோம் கவிதைகளைக்கொண்டுபவனி வருகிறது, இந்த ஏடு, புதிய முயற்சி, அறிவியக்கத்தின் கருத்துக்களையும், தி. மு. க. கொள்கைகளையும், ஏடு பாடுமென்று அறிய மகிழ்கிறோம். கவிதைகள் ஒவ்வொன்றும் மிகமிக இனிக்கின்றன. கவிஞரையும் காவியத்தையும் வாழ்த்துகிறோம்.

விலை அணா 1.

முகவரி:

12, படவேட்டம்மன் கோயில் தெரு, புரசைவாக்கம், சென்னை.

2-பக்கத் தொடர்ச்சி

கு:- 'வ, பேசினுர்…

தி. மு. க:- என்னவாம்?

கு:- சட்டசபைத் தலைவர் வேலைக்கு, கோபால மேனனும்…

தி. மு. க:- யார் சொல்கிருர்கள்? மலையாளிகளுடையசேஷ்டையா…?

கு:- காங்கிரஸ் கட்சிதான் நிறுத்தி…

தி. மு. க:- கா, கண்டிப்பாக இருந்துவிடுவாரே…

கு:- அவரேதான் கோபால மேனன் பெயரைப் பிரேரேபித்தாராம்…

தி. மு. க:- பிறகு

கு:- ஜெயித்துவிட்டார்… கோபாலமேனன்…

தி. மு. க:- மலையாளியா…? எப்படிச் சம்மதித்தார்கள்? ஐயாகூடப் புத்தி சொன்னுர் என்று சொன்னீர்! ஏன் உம் பேச்சைக் கேட்கவில்லை… செச்சே! நீங்கள் தான் அவரைத் தூக்கித் தலை மேலே வைத்துக்கொண்டு கொண்டாடுகிறீர்களே தவிர, அவர் உங்கள் வார்த்தையைத் துளியாவது ஏற்று நடப்பதாகத் தெரியவில்லை…

கு:- சரி, சரி, குத்திக் கிளற வேண்டாம்…போ…போ…

தி மு.க:- இனி, மலையாளிகளை ஆதரிக்கும் 'கா'வும் ஒழிக, தாஞ…

★

## டால்மியா

—★—

இந்திய பண முதலைகளில் ஒருவரெனக் கருதப்படும் டால்மியா, இரண்டு கோடி ரூபாய் ஏப்பம் விட்டதாகக் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கிருராம்! இவர் நடத்திய பாரத் இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் சர்க்கார் சார்பில இருந்த 'செக்யூரிடி' தொகையாம் இது!! இந்த டால்மியாவின் பெயரில் இருப்பது தான், டால்மியாபுரம்.

# ★ குற்றவாளி ★ கூண்டுக்கு வெளியே!!

"உன்மீது கூறப்பட்டுள்ள குற்றத்துக்கு என்ன சொல்கிருய்?"

"என்ன சொல்ல இருக்கிறது தர்மப் பிரபு…ஏழை…"

"ஆடு திருடினது உண்மைதானே! ஒப்புக்கொள்கிருயா குற்றத்தை?"

"ஆமாம், துரையே! திருடினது உண்மைதான்…ஆறு குழந்தைகள் எனக்கு…பசி—வேலை இல்லை-பட்டினி கிடந்தேன். மனைவியோ மூலையில் படுத்தழுகிருள். குழந்தைகளோ பசியால் துடித்தன…ஒரு வழியும் தெரியவில்லை…திருடினேன்…ஆடு திருடியது உண்மைதான்…நான் ஏழை…"

ஏழை, என்பதற்காகச் சட்டம் இரக்கம் காட்டுமா? ஏதோ, பணக்காரன் என்ருலாவது சட்டம், அச்சப்பட்டு, ஏதாவது ஒரு சந்து பொந்து காட்டும், அவன் தப்பித்துக்கொள்ள! ஆடு திருடியவனே ஆறு குழந்தைகளுக்குத் தகப்பன்; அந்தச் செல்வம்தான் அவனிடம்! ஏழை! ஆடு திருடினுன்; ஆரணங்கு களையே திருடி, சட்டத்தின் கண்களில் பொடி தூவிவிட்டு, தப்பித்துக்கொள்ளும் சீமான்கள் உண்டு; இவன் பராரி, எனவே பிடிபட்டான், விசாரணை நடைபெற்றது, குற்றத்தை ஒப்புக்கொண்டான். ஒப்புக்கொண்டதால், இவன் நல்ல உள்ளம் படைத்தவன், ஏதோ பசிக் கொடுமையால் திருடிவிட்டானே தவிர, இவன் கெட்டவனல்ல, எனவே பாவம், இவனை மன்னித்து விட்டுவிடுவோம் என்று நீதிபதி கூறினுரா! கூறுவாரா? சட்டம் என்ன ஆவது! இப்படி ஏழைகள் சிக்கிக்கொள்ளும் போதாவது சட்டத்தை நிலை நாட்டாவிட்டால், பிறகு எப்போதுதான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்க முடியும்! எனவே, ஆடு திருடிய ஏழை தண்டிக்கப்பட்டான். சட்டம் வெற்றி பெற்றது!

ஆடு திருடி, தண்டிக்கப்பட்ட அந்த ஏழை ஒரு நீக்ரோ.

ஆப்பிரிக்கா நாட்டில் ஜோஹானஸ்பர்க் எனும் ஊரில் நடைபெற்றது, சம்பவம்.

ஏழை, எனவே திருடினேன் என்று அந்த நீக்ரோ எடுத்துச் சொன்னது, சட்டத்தின் உள்ளத்தைத் தொடவில்லை, மக்கள் மனதை, உருக்கிற்று. அவர்கள், கள்ளஞக வேண்டிய நிலைமைக்குத் துரத்தப்பட்ட இந்த ஏழையின் நிலைக்கு இரக்கம் காட்டி, தண்டனையை மாற்றுவதற்காக, மேல் கோர்ட்டுக்கு வழக்கைக்கொண்டு போவதற்காக, நன்கொடை திரட்டினர்.

நூறு பவுன் நன்கொடை திரட்டப்பட்டிருக்கிறது!

பரவாயில்லையே, மனிதத்தன்மை இந்த அளவுக்கு மலர்ந்திருக்கிறதா, என்று கேட்கத் தோன்றும். ஆச்சரியம் அதிலே கூட அதிகம் இல்லை, இந்த ஏழை நீக்ரோவிடம் இரக்கம்காட்டி, நன்கொடை திரட்டி இருப்பவர்கள், வெள்ளையர்! ஆப்பிரிக்க நாட்டில்!! கருப்பரைக் கேவலப்படுத்தும் வெறியன் ஆட்சிசெய்யும் நாட்களில்! மனிதத் தன்மை அடியோடு மடிந்துபடவில்லை; அவ்வப்போது அதன் மணம் இதயத்துக்கு இன்பமூட்டத்தான் செய்கிறது!

ஏதோ ஒரோர் சமயத்தில் இரக்கம் — மனிதத்தன்மை இவ்விதம்

மலருகிறது — ஏழை காப்பாற்றப் படுகிருன். ஆனல், எல்லா ஏழைக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காது — அதுமட்டுமல்ல, பசிக் கொடுமையால் கள்ளன் ஆக்கப் படுபவனைச் சட்டத்தினின்றும் மீட்பதற்காகவே சதா சர்வகாலமும் ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்க இயலாது. எனவேதான் ஏழ்மை'யைப் போக்கவும், குறைக்கவும், பெருமுயற்சி எடுத்துக் கொள்வதை இன்றைய சர்க்கார், ஆட்சித் திட்டமாகக்கொள்ள வேண்டுமென்பதை நல்லோர் வலியுறுத்துகிருர்கள்.

பசிவந்திடப் பத்தும் பறந்து போம் — என்பது மறுக்கொணுத உண்மையாக இருப்பதைப் பார்க்கிருேம்.

ஏழ்மையின் காரணமாக நல்லவன் தீயவன் ஆகிருன், அவனை அந்தக்கதிக்கு ஆளாக்கிவிடுவது சர்க்கார்தான்! பாரதியாரின் கோபம் இந்தப் பிரச்சினையிலே அளவுகடந்து சென்று, உலகையே அழித்துவிடலாம் என்ற அளவுக்கு ஆத்திரத்தோடு முழக்கமிடச்செய்தது.

**தனியொருவனுக்கு உணவு இல்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்.** என்றல்லவா பாடினுர்!

பாரதியாரின் கோபம் உலகத்தோடு நின்றது — வள்ளுவரோ, 'ஆண்டவனிடமே சென்று, அச்சமூட்டுகிருர், எச்சரிக்கிருர். பிச்சை எடுத்துத்தான் ஒருவன் பிழைத்தாகவேண்டும் என்றுநிலை இருக்குமானுல், அப்படிப்பட்ட "உலகு இயற்றியானை" ஒழித்துக்கட்டுவோம், என்றே கூறுகிருர்.

உலகையோ உலகு இயற்றியானையோ ஒழித்துக்கட்டுமளவுக்கு 'ஆற்றல் வேண்டியது கூட இல்லை, குற்றம் பிறப்பதும் குணம் சிறப்பதும் சுற்றுச்சார்பைப் பொறுத்து இருக்கிறது என்ற உண்மையை, ஊராள்வோர் உணர்ந்து, மனிதனுடைய 'சுற்றுச்சார்பு' செம்மைப் படத்தக்க வகையில், காரியமாற்றினுலே போதும்—குற்றம் பெருமளவுக்குக் குறைந்துவிடும்.

இரக்கம் எழத்தான் வேண்டும்—ஒரோர் சமயம் எழத்தான் செய்கிறது என்பதை ஆப்பிரிக்கச் சம்பவம் எடுத்துக்காட்டத்தான் செய்கிறது. ஆனுல் இரக்கம் எழும் என்று நம்பிக்கொண்டு இருந்துவிட்டால், போதாது! ஏழையின் வாட்டம் தீர்ந்துவிடாது!

ஆறு குழந்தைகளுக்குத் தகப்பனை தரித்திரவான் அந்த நீக்ரோ, அதனல் திருடினுன் என்று கூறி அவன்பால் இரக்கம் காட்டியது போல, எப்போதும் கூறிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

"தடிப்பயல்! ஆறு குழந்தைகளாம்! அதனுலே கொள்ளை அடிப்பதா!"

"இன்று ஆடு திருடினுன், நாளைக்கு மாடு, பிறகு வீடு நுழைவான். இப்படிப்பட்டவர்களைச் சும்மாவிடக்கூடாது. சமூகத்துக்குப் பெரும் ஆபத்து"

"பட்டினியா? பசியா? பிச்சை எடுப்பதுதானே! இல்லையானல்எங்காவது குளம் குட்டையில் விழுந்து சாவதுதானே! திருடுவதா துணிந்து!"

என்று நாலுபேர் நாலு விதமாகத்தான் பேசுவார்கள்—ஏசுவார்கள்.

"ஐயா! நான் ஏழை! பசிக் கொடுமை, இந்த கெட்டகாரியம் செய்தேன்!" — என்று முதலில் கூறும் 'குற்றவாளி' கூண்டுக்குள் தள்ளப்பட்டு, பழகிப்பழகி பிறகு, குற்றம் புரிந்தேன் என்று ஒப்புக்கொள்ளும் நிலையையும் மாற்றிக் கொண்டு, ஏய்க்கவும், தப்பித்துக் கொள்ளவும்தான் முயற்சிப்பான்—மெள்ளமெள்ள கைதேர்ந்த கள்ளனே ஆகி, உண்மையிலேயே சமூகத்துக்குப் பேராபத்தாகவே ஆகிவிடுவான்!

"போடாமடையா!போயும்போயும், மூணுவது வகுப்பு வண்டியிலே போயா, மூட்டை அடிச்சே! பஞ்சைப் பயலே, மூணுவது வகுப்பு வண்டியிலே நம்மைப்போல ஏழைகள் தானேடா வருவானுங்க — அவங்க தலையிலே கைவைச்சயே, மகா பெரிய சூரன்போலே! நான், ராஜாகுட்டிடா தெரியுமா! பஸ்ட் கிளாஸ் வண்டியிலே படுத்துத் தூங்கிக்கிட்டு இருந்தான் ஒரு சேட், அவனேட தோல்பையை அபேஸ் செய்தேன். தெரியுமா! செய்தா அப்படிச் செய்யணும்! பிச்சை எடுத்ததாம் பெருமாளு, அதெப்பிடிங்கிச்சாம் அனுமாருன்னு சொல்வாங்களே, அதுபோல, நீ, மூணும் வகுப்பு வண்டியிலே போயி, மூட்டையை எடுத்தயே! த்தூ! வெட்கமா இல்லே உனக்கு"—என்று சிறையிலே, கைதேர்ந்த கள்ளன், 'கத்துகுட்டி' கள்ளனிடம் வீரம் பேசுவதுண்டு.

இப்படிப்பட்ட '**தேர்ச்சி**' மெற்ற கள்ளனெல்லாம், முதன் முதலில் வெட்கம், வேதனை, துக்கம், திகைப்பு, எனும் உணர்ச்சிகளுக்கெல்லாம் ஆட்பட்டு, அழுகுரலில், ஐயா! நான் ஏழை! என்று கெஞ்சிப் பேசினவன்தான்.

இரக்கம் அவனுக்குத் துணை நின்று, அவன் ஒரு வழக்கிலே இருந்து தப்பித்துக்கொண்டாலும், மீண்டும் மீண்டும் அவனை வறுமை கொட்டிக் கொண்டே இருந்தால், அவன் என்ன செய்யமுடியும்! திருடுகிருன், பிடிபட்டால் குளறுகிருன்! சிறையில் தள்ளப்படுகிருன், தேர்ச்சிபெற்று வெளியே வருகிருன்; மீண்டும் திருடுகிருன் கோர்ட் அஞ்சும்படி அதட்டிப் பேசுகிருன்!

இப்படி நிலைமைகள் ஆகாதிருக்க வேண்டுமானல், சமூகத்தின் அடிப்படை ஆபத்து, வறுமை என்ற தெளிவும், அதனைக் களைந்தெறியும் திட்டமும், ஆட்சியாளர்களிடம் இருத்தல் வேண்டும். உபதேசம் செய்வதாலும் சட்டத்தைக் காட்டி அச்சமூட்டுவதாலும், குற்றங்களைக் களைந்துவிட முடியாது; சுற்றுச் சார்பைச் செம்மைப்படுத்த வேண்டும். 'ஏழை' குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படும்போது, உண்மைக் குற்றவாளி வேறு இடத்தில் இருக்கிருன் என்றுதான் பொருள்! குற்றம் புரியவேண்டிய நிலையில் அவனைக் கொண்டு சேர்த்த 'சூழ்நிலை'யை மாற்ருதிருக்கும் உண்மைக் குற்றவாளி, இருக்கிருன், வேறு இடத்தில்!

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் மேலும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி




**தம்பி,**

ஒரு 'போர்க்களம்' காணலாம், புறப்படு.

காணமட்டுமா! என்ன அண்ணா! இது! என்னை என்ன கட்கம் ஏந்தத் தெரியாதவன், கடும் போருக்கு ஏற்றவனல்ல என்றா எண்ணிக் கொண்டாய்! மாற்றான் முன் மண்டியிடும் பரம்பரையினனா? மறத்தமிழனன்றோ! என்றெல்லாம் கேட்டுவிடாதே, நான் உன்னை, முடிந்துபோன போர்பற்றிய 'செய்தி'யைக் கேட்கச் சொல்கிறேன்—நீ 'போர் முரசு' கேட்கிறது என்றெண்ணி ஆர்த்தெழுந்துவிடாதே.

ஒரு களம்—இருதரப்புப் படைகள், எதிர் எதிர்!

**"துப்பாக்கிகள் தயாரா? தோட்டாக்களைப் பொருத்திவிட்டீர்களா? 'குதிரை'யைச் சரிபார்த்துக் கொண்டாகிவிட்டதா? சரி! ஏறு! முன்னேறு! ஏறு, முன்னேறு! தாக்கு! உம், தாமதம் ஏன்? தாக்கு!! சுடு! வேகமாக!"**

படைத்தலைவன் இதுபோல 'கட்டளை' பிறப்பித்துவிட்டான். படைகள், பாய்ந்தன எதிரியை நோக்கி. வேட்டுகள் கிளம்பின! துப்பாக்கிகள், பீரங்கிகள் முழக்கமிட்டன!

எதிரிப்படை வரிசையிலிருந்து ஏளனச் சிரிப்பொலி கிளம்பிற்று!

வேட்டுகள் கிளம்புகின்றன! தோட்டாக்கள் பறக்கின்றன! துப்பாக்கிகள் முழக்கமிடுகின்றன! படை பாய்ந்து முன்னேறுகிறது! எதிரிப் படையோ, 'கெக்கலி' செய்கிறது, கைகொட்டிச் சிரிக்கிறது!! ஏன் தெரியுமா, தம்பி! துப்பாக்கி சுடுகிறது, ஆனால் ஆளைச் சாகடிக்க மறுக்கிறது! வேட்டுகள் கிளம்பி வேகமாகப் பாய்கின்றன, ஆனால் யாரையும் பிணமாக்க மறுக்கின்றன. **அழிவுக்கருவிகள், 'அஹிம்சா' விரதம் பூண்டுவிட்டன!** வாண வேடிக்கை போன்ற சத்தம் கேட்கிறதே தவிர, ஆளைக் கொல்லும் 'சக்தி' இல்லை, தோட்டாக்களுக்கு! துப்பாக்கிகள், பார்வை அளவில் நேர்த்தியாகவே உள்ளன! ஆனால் அவைகளை நம்பிக் களத்திலே கடும்போரில் ஈடுபடச் சென்ற படை வீரர்களை, காட்டிக் கொடுத்துவிட்டன! வெடிக்கின்றன, ஆட்களைச் சாகடிக்க மறுக்கின்றன!

தோட்டா இல்லாத துப்பாக்கி என்று கேலி மொழி பேசுவர்! தோட்டாவும் துப்பாக்கியும், பலாத்காரச்செயலிலே ஈடுபடமறுத்திடும் நிலைக்கு, என்ன கூறுவது!

கண்டனர் எதிரிகள்—'வெத்து வேட்டுகளை'த் தாக்கினர்; கொன்று குவித்தனர்!

வீரம் இருக்கிறது நிரம்ப, ஆனால் 'வஞ்சகம்' அந்த வீரர்களை, இந்தக் கதிக்கு ஆளாக்கிற்று.

நம்மை நாசமாக்கும் எதிரி, இங்கே இல்லை, களத்தில் இல்லை, அவன் நம் நாட்டிலே இருக்கிறான், அரண்மனையில் அழகிகளின் ஆலிங்கனத்தில் சுகமனுபவித்துக் கொண்டிருக்கிறான், நம்மைக் களம் சென்று கடும் போரிடும்படி கட்டளையிட்ட காவலன், கட்டழகிகளைக் தொட்டிழுத்து—முத்தமிட்டு மகிழ்கிறான் — தொலையட்டும் — இதழ் கொத்தி இன்புறுகிறான்—ஒழியட்டும்—கொய்யாக் கனிகளின் கோலாகலத்திலே தன்னை மறந்து கிடக்கிறான்—கிடக்கட்டும் காமாந்தகாரன்—ஆனால் நம்மிடம் அவன் தந்தனுப்பிய போர்க்கருவிகள் இப்படியா இருப்பது! ஆளைச் சாகடிக்க முடியாத ஆயுதமா! வெடிச்சத்தம் கிளப்புகிறது, எதிரியைச் சாகடிக்கும் சக்தி காணோமே! வெத்து வேட்டுகளைக் கொடுத்தா, வெஞ்சமருக்கு நம்மை அனுப்புவது? மாற்றானிடம்காட்டிக்கொடுத்தானே, மன்னவன் என்ற பட்டம் பெற்றுக்கிடக்கும் அந்த மாபாவி! என்று கொதித்துக் கூவினர், களத்தில் பிணமலை! இரத்தமும் கண்ணீரும் பீறிட்டெழுந்த நிலை, வஞ்சகத்தால் வீழ்ந்தோம், எதிரியிடம் ஒரு எத்தனால் காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டோம். சித்திரவதைச் சாவடிக்கு நம்மைத்துரத்திவிட்டு, சிற்றிடையாளுடன் சித்திர மண்டபத்தில் காதல்சிந்து பாடிக் கொண்டிருக்கிறான், மாமிசமலை.

தாயகமே! உன் பொருட்டு எதையும் இழக்கத் தயங்கோம், இன்னுயிர் தரத்தயார், ஆனால் எமது உயிர் பிரியுமுன், தாய் நாடே! உன்னை இழிவு படுத்தக் கிளம்பும் எதிரியின் உயிரைக் குடித்திட வேண்டாமா; போரிட்டு மடியத் தயார், அன்னையே! போரிட்டு மடியச் சித்தமாக இருக்கிறோம், ஆனால், இதோ பாரும், எமக்குத் தரப்பட்டுள்ள போர்க் கருவிகளை! வெத்து வேட்டுகளை! எதிரியிடம் எங்களைக் காட்டிக்கொடுக்கும் கருவிகளை.

வீரம் இருக்கிறது, பிறந்த நாட்டைக் காப்பாற்ற, ஆனால் ஒரு வேந்தன் இருக்கிறானே' எங்களை எதிரியிடம் காட்டிக்கொடுக்க. படைக்கலத்தைப் பார் தாயே! பார், பஞ்சை நாடு, பராரி நாடு, போர்க் கருவிபெற வழியில்லை என்று கூறட்டும், கரங்களே துப்பாக்கி—பாய்ந்து சென்று, மாண்டவர் போக, மீதமுள்ளோர் எதிரி மீது பாய்ந்து, குரல் வளையை நெரித்தே கொன்று போடுகிறோம். ஆனால், அரசன் செய்ததென்ன, அருமையான படைக்கலங்கள் என்று கூறி, இந்த 'ஓட்டை ஒடிசல்களை' 'வெத்து வேட்டுகளை'க் கொடுத்து, களம் அனுப்பினானே.

தாயகமே! நீயே கூறு, யார் நம் எதிரி, எதிரே இருந்து போரிடும்

படையா, எழில் அரண்மனையில் இருந்துகொண்டு, எம்மைக் காட்டிக்கொடுக்கிருனே அந்த வேந்தனு? யார், ஒழிக்கப்படவேண்டும். போரிடும் படையா? முதுகிலே கட்டாரிகொண்டு குத்துவது போன்ற துரோகமிழைத்த அந்தத் தூர்த்தனு? இறந்து படுகிறோம், தாயே! இறந்து படுகிறோம். எதிரியால் கொல்லப்பட்டவர்களல்ல, எம்மை ஆள்வதற்கென்று ஏற்பட்ட எத்தனுல், இந்தக் கதிக்கு ஆளானேம்.

தம்பி! நாடகமேடையானுல், இவ்விதமெல்லாம், 'வீரர்கள்' பேசமுடியும்—கொட்டகை அதிரும், பணம் குவியும்! இது களம்! ஓட்டை ஒடிசல், வெத்து வேட்டுகள், தொட்டு இழுத்ததும் துண்டாக்கிப்போகும் கருவிகள்—இப்படிப்பட்ட படைக்கலங்களைக் கொடுத்து, எதிர்த்து வந்த படையுடன் போர் நடாத்தும்படி ஈஜிப்ட் படை அனுப்பப்பட்டது! சித்திரவதைக்கு ஆளாயிற்று! தோல்வி கண்டனர், துயரம் துளைத்தது, வெட்கம் வேலாகக் குத்திற்று!

படைக்குத் தேவையான 'கருவிகளை'ச்சேகரித்தளிக்கும் பொறுப்பு மன்னனுடைய உரிமைகளில் ஒன்று! மன்னனே, அவனுடைய "கோப்பை தூக்கிகள்" "குறிப்பறிந்து கோலமயிலினைக்கொண்டு வருவோர்" ஆகியோரிடம் 'ஆயுதம் வாங்கித்தரும்' பணியினை ஒப்படைத்திட, அவர்கள், கொள்ளை அடித்திடும் குணத்தினராதலால், 'வெத்து வேட்டுகளையும் ஓட்டை ஒடிசல்களையும்' கொண்டுவந்து குவித்து, கொற்றவனிடம் கோடிப் பொன் பெற்றுப்போயினர்! மதியற்ற மன்னன், மக்களின் வரிப் பணத்தால் திரண்ட நிதியைப் பாழாக்கியதுடன், நாட்டின் கண்மணிகளைக் களத்திலே கண்டதுண்டமாகும்படிச் செய்தான்-நாட்டுக்கும் இழி நிலை பிறந்தது.

இத்தாலி நாட்டில், அரசு இழந்து, அரசும் ஈடாகாது என்று கூறத்தக்க எழில் படைத்த காதற்கிழத்தி நாரிமணியும் பிரிந்து, அரண்மனையின் அலங்கோல வாழ்வின் விளைவாகக் கிடைத்த தொங்கு சதை உடனிருந்து குலுங்க,கண்டோர் உதட்டைசைத்துக் கேலிசெய்ய, பரூக் உலவிக்கொண்டிருக்கிருன். பழுதுபட்ட படைக்கலங்களை, விற்ற அந்த 'பரமதயாளர்' எங்கே இருக்கிருர்கள், தெரியுமா!

பாதகம் விளைவித்த பரூக், பட்டமிழந்தான்—காதகர்கள் கெட்டொழிந்தனர் — 'ஓட்டை ஒடிசலை' விற்ற அந்தப்படுபாதகர்கள்,என்ன ஆயினர்?

கோடிக்கணக்கான பொருள் நஷ்டம் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கான அரும் உயிர்களைக் குடித்த, அந்தக் கொடியவர்கள், கண்டுபிடிக்கப்பட்டு, நானிலம் காரி உமிழத்தக்க நிலை பெற்றனரா? எங்கே உளர் அந்த எத்தர்கள்? என்ன கதிக்குத் துரத்தப்பட்டனர்? கண்டித்தால் மட்டும் போதாதே அந்தக் கயவர்களை, கடுமையாகத் தண்டிக்கவும் வேண்டுமே! பழுதுபட்ட படைக்கலனை விற்பனை செய்த பாதகர் யார்? எங்கு உளர்? என்று கேட்டுப்பார், தம்பி! காங்கிரஸ் நண்பர்களை! கோபம் பிறக்கும்!

அநியாயமாக ஆயிரமாயிரம் உயிரைப் பலிவாங்கிய அந்தப் பாதகர்கள் இப்போது! **'பாரத நாட்டிலே'** இருக்கிருர்கள், தம்பி!

"கைதிகளாகவா? என்று கேட்கிருய். உன் நெஞ்சில் நேர்மை அவ்வளவு சுரக்கிறது! நேரு மகான், அவர்களைக் 'கைதிகளாக' அல்ல, 'ஆசிரியர்களாக' இங்கு அமர்த்தி வைத்திருக்கிருர்! அக்ரமம், அநியாயம்! அடுக்காது.—என்றெல்லாம்! என்னைப் பார்த்து முழக்கமிட்டு என்ன பலன், தம்பி, இந்திய சர்க்காரின் ஆதரவில் அரவணைப்பில், அந்த 'ஆயுத கர்த்தாக்கள்' இப்போது இருக்கிருர்கள்.

ஈஜிப்ட் நாட்டுக்கு, 'பழுதுபட்ட' போர்க்கருவிகளை விற்பனை செய்த மகானுபாவர்கள், சுவிட்சர்லாந்து நாட்டுக் கம்பெனியார்.

'பாரதநாட்'டுக்கு, படைக் கருவிகள் தயாரிக்கும் தொழிலகம், சர்க்காரால் அமைக்கப்பட்டு, இதுவரை ஏராளமான பொருளை விழுங்கி இருக்கிறது.

இந்தத் தொழிலகத்தில் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளவும், ஆயுத உற்பத்திக்கான 'அருங்கலை'யைக் கற்றுத்தரவும், பெரும் ஊதியத்தைப் பெற்றுக்கொண்டு அமர்ந்திருப்பவர்கள், இந்த சுவிட்சர்லந்து கம்பெனியைச் சார்ந்தவர்கள்.

எந்தக் கம்பெனி, கொள்ளை அடிக்கும் போக்கில், ஈஜிப்ட்டுக்கு பழுதுபட்ட போர்க் கருவிகளை விற்பனை செய்து, அந்த நாட்டுக்குத் துரோகம் விளைவித்ததோ, அதே கம்பெனியினர்தான், இங்கு, ஆயுதத்தொழிற்சாலைக்கு ஆசிரியர்கள்.

## முத்தன் கேட்கிருன்!

முனியன்:—ஏண்டா முத்தா, முகத்திலே கரி பூசியாச்சி... வீருப்பா பேசுவயே, காங்கிரசுக் கட்சியைப் பத்தி, பார்த்தயா இப்ப. உன்னோட முதலாளி காங்கிரசாயிட்டாரு...!

முத்தன்,—அடே, அப்பா, அதைப் பத்தித்தான், முகத்திலே கரி பூசியாச்சி என்கிருயா... அட பைத்யக்காரா, எங்க முதலாளியல்லவா உங்க கட்சி முகத்திலே கரி பூசிவிட்டாரு, நீங்க கதர், கதர்னு கதறினப்போ அவரு 'ஜோரா' சீமை ஜவுளி வித்து சீமானுனுரு. நீங்க கள்ளுக் கடை மறியல் செய்தப்போ, அவரு கள்ளுக்கடை ஏலம் எடுத்து இலட்சாதிபதியானுரு, உங்க தலைவர்களை ஜெயிலிலே போட்ட கலெக்டர் துரைக்கு அவரு விருந்துவைச்சாரு... உங்க மூக்கை அறுத்துகிட்டே இருந்தாரு— நீங்கல்லவா இப்ப வேறேவழி இல்லாமே, அவர்கிட்டே சரணுகதி ஆகி, காங்கிரசிலே சேர்த்துகிட்டிங்க... கொள்கை குப்பைக்குப் போச்சி, இப்ப, இவர் பின்னுலே கொடி தூக்கிகிட்டு வாரிங்க, இப்படி ரோஷங்கெட்ட வேலை செய்துகிட்டு என்னையா கேலி செய்யறிங்க.....

★

வழுக்கி விழுந்தவள், 'பத்தினிகள், பள்ளிக்கு'த் தலைமை ஆசிரியை.

*எவ்வளவு பொறுப்பற்ற போக்கு எத்துணை அலட்சிய சுபாவம்.*

அக்ரமம் செய்த அந்தக் கம்பெனியாரிடம், ஆயுதம் தயாரிக்கும் தொழில் அமைக்கும் பொறுப்பு ஒப்படைத்தனர்— ஆண்டுகள் உருண்டோடின— இலட்ச இலட்சமாகப் பணம் கரைந்தது — ஆயுதம் உருவாகச் செய்தனரோ? இல்லை. ஆயுதம் செய்வதற்கான தொழில் நுட்பத்தை, இங்குள்ளவர்களுக்குக் கற்றுத் தந்தனரோ? அதுவும் இல்லை. என்ன செய்கிறார்கள்? ஊதியம் பெறுகிறார்கள்! உண்டு கொழுக்கிறார்கள்! நேரு சர்க்காருடைய ஏமாளித்தனத்தை எண்ணி எண்ணிக் கேலி செய்து கொண்டிருப்பார்கள். வேறென்ன செய்வர்.

நாம் யார், நமது நடவடிக்கை எத்தகையது என்பதைத் தெரிந்தும், நம்மை அழைத்து வந்தார்களே, இவ்வளவு 'இளித்தவாயர்' இருக்கும்போது நமக்கென்ன குறை என்று எண்ணிக் கொள்வர்.

இந்தத் தொழில் அமைப்பு, பெருமளவுக்கு நஷ்டம் கொடுத்துவிட்டது.

எதிர்பார்த்த தரத்திலோ, அளவிலோ, கருவிகள் உற்பத்தி செய்யப்படவில்லை. தொழில் நுட்பத்தை, இங்குள்ளவர்களுக்கு போதிக்க, சுவிட்சர்லாந்து நிபுணர்களால் முடியவில்லை.

டில்லி பார்லிமெண்டில் அமைச்சர், வெட்கமின்றி, ஒப்புக்கொள்கிறார், ஒப்புக்கொண்டு, கூறுகிறார், இது சகஜம், போகப்போக எல்லாம் சரியாகிவிடும். நஷ்டம், கஷ்டம், இவைகளைப் பார்த்தால் ஆகுமா? இவைகளைத் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

தம்பி, தாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமாம்.

கோடி கோடியாகப் பணத்தைக் கோட்டினாலும், இந்த இயந்திரத் தொழில் அமைப்பு சரிப்பட்டு வராது என்று ஸ்காயிப் எனும் பிரிட்டிஷ் நிபுணர் கூறிவிட்டார். இந்த பிரிட்டிஷ் நிபுணரை, வரவழைத்து, இந்தத் தொழில் அமைப்புகளைப் பரிசிலனை செய்து கருத்துரை அளிக்கும்படி கேட்டுக் கொண்டது, நேரு சர்க்காரே தான்.

*தாங்கிக் கொள்வதாமே தம்பி! எவ்வளவு தாங்கிக்கொள்வது! எத்தனை ஊழல்களை எத்துணை பொருள் நஷ்டத்தை, எத்தகைய நாற்றங்களை!*

தம்பி, செப்டம்பர் 18-ல் புது டில்லியிலிருந்து, பொதுக் கணக்குக் கமிட்டி எடுத்துக் காட்டுவதை, சுதேசமித்திரன் வெளியிடுகிறது— படித்துப்பார்.

"அபிவிருத்தி திட்டங்களுக்குப் பணத்தைச் செலவழிக்கும் விஷயத்தில் சர்க்கார் மிகுந்த பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்று பொதுக் கணக்குக் கமிட்டி தனது யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறது பார்லிமெண்டு அனுமதிக்கும் பணத்துக்கு மேல் ஒரு அணா கூட அதிகமாகச் செலவழிக்கக் கூடாதென மந்திரி சபைகளுக்கு மேற்படி கமிட்டி அறிவுறுத்தியிருக்கிறது.

பாகிஸ்தான் கொடுக்க வேண்டிய கடன் சம்பந்தமாக இந்திய சர்க்கார் அந்த நாட்டுடன் உடனே ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டுமென கமிட்டி தெரிவித்திருக்கிறது (பாகிஸ்தான் இந்தியாவுக்கு 300-கோடி ரூபாய் கொடுக்கவேண்டும்.)

வருமான வரி விஷயமாக சர்க்கார் காட்டியுள்ள சலுகையையும் கமிட்டி கண்டித்திருக்கிறது. அமுக்கிவைக்கப்பட்ட பணம் சம்பந்தமாக சரியான வருமான வரி விதிக்கப்படவில்லை யென்றும், விதிக்கப்பட்ட வரியால் கிடைத்த பணம், கிடைக்கவேண்டிய பணத்தில் 15-சதவிகிதமேயென்றும் கமிட்டி அபிப்பிராயம் சொல்லியிருக்கிறது.

பிரிட்டிஷ் கம்பெனி விஷயத்தில் சர்க்கார் கையாண்ட கொள்கையும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே தயார்செய்தபகுதிகளைக்கொண்டு வீடு சிருஷ்டிக்கும் முறையைக் கையாளும் மேற்படி கம்பெனி கட்டிய வீடுகள் சாதாரண முறையில் கட்டப்படும் வீடுகளைவிட அதிக விலையாகியிருப்பதைப் பற்றிக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது.

தேசத்துக்கு புட்டிப்பால் வாங்கி அதனால் சர்க்காருக்கு ஒரு லட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டிருக்கிறது. புட்டிப்பால் வாங்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கையெடுக்க வேண்டுமென கமிட்டி கூறியிருக்கிறது.

வெளிநாடுகளில் இந்திய தூதராலயங்களில் இருக்கும் இந்திய அதிகாரிகள் பொய் சர்ட்டிபிகேட் காட்டி அலவன்ஸ் வாங்குவதையும் கமிட்டி தீவிரமாகக் கண்டித்திருக்கிறது.

2 பவுன் முதல் வைத்து ஆரம்பித்த ஒரு உதவாக்கரை கம்பெனியோடு சர்க்கார் உடன்படிக்கை செய்து கொண்டு 17000 பவுன்களை அளித்

## தவறு செய்தார்!

## தர்பார் நடத்துகிறார்!!

"நான் செய்த ஒரு தவறினால் சர்க்காருக்கு 2-இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது!" என்கிறார் நிதி அமைச்சர் சுப்ரமணியம்.

வன்னியகுல க்ஷத்திரியர்களில் குற்றப் பரம்பரையினருக்கு மட்டும் சம்பளச் சலுகை என்பது சர்க்கார் திட்டம்.

இதற்கான உத்தரவு தயாரித்தபோது மந்திரி செய்த 'பிழை'யின் காரணமாக, குற்றப் பரம்பரையில் வந்த மாணவர்களுக்கு மட்டும் தரப்பட வேண்டிய சலுகை, எல்லாருக்கும் கொடுத்ததில் இரண்டு இலட்ச ரூபாய் அதிகச் செலவாயிற்று.

ஒரு அதிகாரி இந்தத் தவறு செய்திருந்தால், இதற்குள் அவர் பாடு அதோகதியாகி இருக்கும்.

காங்கிரசல்லாத மந்திரிகள் காலத்திலே இவ்விதம் நடந்திருந்தால், மேடைகளிலே 'கர்ஜனை' கிளம்பி இருக்கும்.

**யார் அப்பன் வீட்டுப் பணம். கொண்டு வந்து கொடுடா, புத்திகெட்டவனே.**

**இவ்வளவு துப்புக் கெட்டவனுக்கு மந்திரி வேலை ஒரு கேடா.**

என்றெல்லாம் மட்டரகங்கள் பேசி இருக்கும்.

ஜனநாயகத்தின் கண்ணியத்தை மதித்து நடக்கும் நாடுகளிலே, ஒரு மந்திரி, இப்படி ஒரு தவறு செய்திருந்தால், மன்னிப்புக் கேட்டுக்கொள்வார், தான் பொறுப்பான பதவி வகிப்பது தவறு என்று கூறி ராஜினாமாச் செய்திருப்பார்.

**இங்கேயோ, தவறு செய்தார், தர்பாரும் நடத்துகிறார்.**

REGD No. 4642 திராவிடநாடு போன் நெ. 15.

## யார் வீட்டுப் பணம்?

இந்தியைப் பரப்பவேண்டும் என்று சொல்லித்தான், ஏராளமான பணத்தையும் நேரத்தையும், இங்கே பாழ்படுத்துகின்றனர். இதோடு, நின்றுவிடவில்லை, இந்தி வெறியர்களின் பேராசை? இதோ பாருங்கள் ஒரு பட்டியல். இந்த இடங்களிலெல்லாம் இந்தியைப் பரப்புவதற்காக, டில்லி பீடம், பணம் செலவழிக்கிறதாம் — "மெயில்" தருகிறது இத்தகவலை.

நேபாளத்துக்கு:- இந்தி ஆசிரியர்கள்.

இந்தோனேஷியா:- அங்கே உள்ள கல்விக்கூடங்களுக்கு இந்தியைப் பரப்ப பண உதவி.

மேற்கிந்தியத்தீவு:- இந்தியைப் பரப்ப ரூ 75,000 மான்யம்.

தென்கிழக்காசியா:- இந்தியைப் பரப்புவதற்கென ரூ 50,000

கிழக்கு ஆபிரிகா:- 15 ஆசிரியர்களுக்கு இந்திச் சொல்லிக் கொடுப்பதற்காக மாதா மாதம் கௌரவச் சம்பளம் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 200

பீகிங், ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள்:- ஆகியவைகளுக்கும் பல இந்தி ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றனராம்.

திருக்கிறார்களென்றும், அதுவும் அந்தக் கம்பெனிக்கு டைரக்டரான ஒருவர் கையெழுத்தின்மேல் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், பணம் வாங்கின தேதியில்தான் அவர் டைரக்டராயிருப்பதாகவும், இப்படிப் பணம் கொடுத்திருப்பது கண்டிக்கத் தக்கதென்றும் கமிட்டி கூறுகிறது.

கொள்ளை போகிறது பணம் இவ்வண்ணம்; கோட்டை மீதேறிப் பேச வருகிறார் கோமான்.

நாற்றமடிக்கிறது ஊழல், நாட்டிலே பவனி வருகிறார் நேரு பண்டிதர்.

1—9—55 ல், கணக்கு ஆய்வாளர்கள், ரயில்வே தானியக் கடையில் நிர்வாக ஊழலின் விளைவாக ஆறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதை எடுத்துக் காட்டினர். —நேரு என்ன செய்தார்? சோவியத் நாட்டிலே தான் கண்ட சோபிதத்தை எடுத்துரைத்தார்—வாயைப் பிளந்துகொண்டு மக்கள் கேட்டுக் கொண்டிருந்தனர்—ஊழல் நிர்வாகத்தின் பொறுப்பாளர்கள், கண்ணைச் சிமிட்டிக்கொண்டு, புன்னகை செய்தனர்.

தானியம் வாங்கிய விலை 11 கோடி, விற்பனையானது 5 கோடி ரூபாய்க்கு, ஆறு கோடி நஷ்டம்.

ஆறு கோடி நஷ்டமா, அநியாயம், அநியாயம் என்று பேச்சு எழுந்ததும், பண்டிதர், பாரெல்லாம் பஞ்ச சீலம் எனும் கொள்கையை வரவேற்பதுபற்றிப் பேசலானார்.

4000 ரூபாய் பெறுமானமுள்ள ஓட்டை விமானத்தை மெருகு கொடுத்து 1,60,000 ரூபாய்க்கு விற்பனை செய்ததுடன், பழுது பார்த்த செலவு, டைரக்டர் ஊதியம் என்று பல புள்ளிகள் கொடுத்து பெரும் தொகையைப் பெற்றுக்கொண்டது, விமானக் கம்பெனி, சர்க்கார் விமானத் தொழிலை தேசிய மயமாக்கிய போது.

தம்பி, பெரிய விஷயங்களிலே தான் 'கோட்டை' விடுகிறார்கள் என்று எண்ணிக் கொள்ளாதே—மிக மிகச் சாமான்யர்களகூட ஏமாறாத விஷயத்திலெல்லாம், 'சர்வ தேசப் புகழ்பெற்ற நேரு சர்க்கார்' எளிதாக ஏமாறுகிறது.

குடி இருந்துகொண்டு 'வாடகை, தராமலிரும்பது அக்ரமம்; வாடகை வசூலிக்காமலிருப்பது ஏமாளித்தனம்! அல்லவா?

நேரு சர்க்கார், குடி இல்லாமலே வாடகை செலுத்துகிறது!

இதைக் கண்டிக்க எனக்கு வார்த்தை தெரியவில்லை—காங்கிரஸ் நண்பர்களையே கேட்டுத் தெரிந்துகொள்!

**4,60,000** ரூபாய் வாடகை செலுத்தியிருக்கிறது சர்க்காருடைய தபால் தந்தி இலாகா—கல்கத்தாவில் இரண்டு கட்டிடங்களுக்கு.

1948லிருந்து 1952 வரையில்' வாடகை தந்திருக்கிறார்கள்—ஒரு நாள் கூட அதிலே வாழவில்லை!

தபால் தந்திஇலாகா அலுவலகத்துக்காகத்தான 'பிரம்மாண்டமான, இரண்டு கட்டிடங்களை வாடகைக்கு எடுத்தனர்; ஏற்கனவே உள்ள அலுவலகக் கட்டிடம் கலனாகி விட்டதால், புதுப்பித்துக் கட்டத்திட்டமிட்டனர், புதியகட்டிடம் எழும்வரையில் 'வாடகை, கட்டிடம் தேவை என்று எண்ணி, பெரியமாளிகைகள் இரண்டை வாடகைக்கு எடுத்து, ஒழுங்காக, வாடகைப் பணம் செலுத்திவந்தனர்; அவ்விதம் செலுத்திய வாடகைப்பணம்தான் நாலு இலட்சத்து அறுபதனாயிரம், ஆனால் திட்டமிட்டபடி, பழய கட்டிடத்தை இடிக்கவுமில்லை, வாடகை கட்டிடத்துக்கு அலுவலகத்தார்குடிபோகவுமில்லை, வாடகைப் பணத்தை மட்டும் கட்டிக்கொண்டு வரத்தவறவில்லை! ஏறக்குறைய ஐந்து இலட்ச ரூபாய் வாடகை செலுத்தியான பிறகு, கணக்கு ஆய்வாளர் பார்த்து, வீணாகஏனய்யா, வாடகை தருகிறீர்கள் என்று கேட்ட பிறகு தான், இந்திய சர்க்காருக்கு, காலியாக இருக்கும் கட்டிடத்துக்கு வாடகை செலுத்திவந்த ஏமாளித்தனம் தெரிந்தது. தெரிந்து? ஐந்து இலட்சம் கரைந்தது.

**இவ்விதம் பாழான பணம், கோணலாகிப் போன திட்டம், நாற்றமடிக்கும் ஊழல், வளர்ந்தபடி இருக்கக் காண்கிறோம். வெட்கமின்றி அமைச்சர் சொல்கிறார் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று.**

**ஊழல்கள் பெருகிய வண்ணமுள்ளன பண்டிதரின் உலாவோ, நடந்த படி இருக்கிறது!!**

அன்பன்,

**அண்ணாத்துரை.**

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.